பொன்னி

பொருளடக்கம்

NA-4

மலர் 5 | மே 10, 1951 | இதழ் 5


திருவள்ளுவர் ஆண்டு 1982 சித்திரைத் திங்கள் 27ம் நாள்

விலை அணு 4

தேர்தலும் உணவு நெருக்கடியும்

"வரப்போகும் தேர்தலில் காங்கிரஸ் ஸ்தாபனம் நிச்சயமாக வெற்றிபெறும். அதில் எனக்குக் கொஞ்சம்கூடச் சந்தேகம் கிடையாது. ஏனெனில் காங்கிரஸுக்கு யானை பலம் இருக்கிறது. ஆனல் மக்களின் விருப்பங்களுக்கு உண்மையான பிரதிநிதியாகக் காங்கிரஸ் ஸ்தாபனம் அமையாவிட்டால் தேர்தலில் வெற்றிபெறுவதால்மட்டும் என்ன பயன்?......தற்சமயம் சென்னை மாகாணத்திலும் பீஹார் மாகாணத்திலும் ஏறக்குறையப் பஞ்ச நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதில் ஏராளமான ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சாக நேரிட்டால் தேர்தல்களைப்பற்றிப் பிரமாதமாகப் பேசுவதெல்லாம் வெட்டிப் பேச்சுத்தான். உணவின்றி மக்கள் இறக்க நேரிட்டால் தேர்தல்கள் நாசமாகப் போகட்டுமென்றுதான் சொல்வேன்"

[புலந்தசாகரில் 29-4-51 அன்று நடைபெற்ற உத்திரப்பிரதேசக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பேசும்போது முதலமைச்சர் நேரு இவ்வாறு குறிப்பிட்டார்]



[தென்னிந்திய உணவு நெருக்கடி குறித்து நேரு கவ[illegible] தெரிவித்திருக்கிருர்.]

தேர்தல் உற்சாகம்

வரப்போகும் நவம்பர் - டிசம்பர் மாதங்களில் புதிய அரசியலமைப் பின்படி நாட்டின் பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறது. பல ஆண்டுகளுக்குப் பின் மக்களுக்குத் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு அப்போதுதான் கிடைக்கப்போகிறது. எத்தனையோ ஒத்திவைப்புகட்குப் பிறகு 1951-ம் ஆண்டு இறுதியில் தேர்தல்களை நடத்தி முடித்துவிடுவதென நேரு சர்க்கார் தீர்மானித்துவிட்டனர். சென்னை மேல் சபையில் 1952 பிப்ரவரியில் தேர்தலை நடத்தும்படி கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் அண்மையில் நிறைவேற்றப்பட்டது நண்பர்களுக்கு நினைவிருக்கலாம். அத்தீர்மானத்தையும் புறக்கணித்துவிட்டுத் தேர்தல்களை முன் குறிப்பிட்டபடியே நவம்பர் - டிசம்பரில் நடத்திவிடப் போவதாக டாக்டர் அம்பேத்கார் பார்லிமெண்டில் கூறியிருக்கிறார். தள்ளிப் போடும் வித்தையை மறந்து செயலாற்றத் துணிவு கொண்டுள்ள இந்திய சர்க்காரைப் பாராட்டத்தான் வேண்டும்.

இந்நிலையில் தேர்தல் எதிரொலியாக நாட்டிலெங்கும் நாம் காணும் நிகழ்ச்சிகள் பலப்பல. அவற்றைக் கோவைப்படுத்திப் பார்த்தால் பல வேடிக்கைகளை, விசித்திரங்களைப் புரிந்து கொள்ள முடியும். தேர்தல் உற்சாகம் என்னென்ன கோலம் கொள்ளுகிறது என்பதை மக்கள் தெரிந்து கொண்டால்தான், தங்கள் வாக்குகளை வரப்போகும் பொதுத் தேர்தல்களில் சரிவரப் பயன்படுத்த முடியும். வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இந்த உரிமையைப் பொறுப்புணர்ந்து மேற்கொள்ள வேண்டிய அளவுக்குப் பொதுமக்கள் தங்கள் அரசியலறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நல்லவர்கள் ஆட்சியை நிறுவும் முயற்சி வெற்றிபெற முடியும்.

தேர்தல் பெரியதொரு பிரச்னையாக நாட்டில் இப்போது பேசப்படுகிறது. தேர்தலில் கலந்து கொள்வதா, வேண்டாமா என்று ஒவ்வொரு கட்சியும் ஆலோசனையில் மூழ்கியுள்ளது. திராவிடக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் தேர்தலில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று அறிவித்துவிட்டன; ஆனால் காங்கிரஸ் மீண்டும் பதவிக்கு வாாதபடி தங்களால் கவனித்துக்கொள்ள முடியும் என்றும் அறிஞர் அண்ணாத்துரை அண்மையில் தெரிவித்துள்ளார். கம்யூனிஸ்ட் கட்சி புதிய திட்டங்களோடு

தேர்தல் முரசுகொட்டத் தொடங்கிவிட்டது. இந்தியா முற்றும் தேர்தலில் கம்யூனிஸ்ட் நண்பர்கள் போட்டியிடக் கூடும். சோஷலிஸ்ட் தோழர்களும் தேர்தல் ஆர்வங்கொண்டு, நாடெங்கும் தொடர்ந்து சுற்றுப் பயணங்களை நடத்தி வருகின்றனர். இந்து மகா சபை தன் தேர்தல் திட்டத்தை வெளியிட்டிருக்கிறது. இந்துக்கள் அல்லாதாருக்கும் தம் கட்சியில் இடமுண்டென மகாசபைக்காரர்கள் தங்கள் 'சமரச மார்க்கத்தை'ப் புலப்படுத்தத் தொடங்கியிருக்கின்றனர். தென்னாட்டில் ஜஸ்டிஸ் கட்சி தேர்தல் நேரத்தில் சுறுசுறுப்பாக வேலைசெய்ய முனைந்திருக்கிறது. தோழர் எஸ். ராமநாதன் அவர்களின் குடியரசுக் கட்சியினர் மாநாடு நடத்தித் தங்கள் திட்டங்களை மக்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றனர். இவை தவிரக் காங்கிரஸிலிருந்து பிரிந்து வருவோர் கட்சிகள் பல நாளுக்கு நாள் தோன்றியவண்ணம் இருக்கின்றன. ஆந்திராவில் ரங்கா-பிரகாசம் குழுவினர் பிரஜா கட்சி என்றொரு புதிய கட்சியைத் தொடங்கிப் பலமான ஆதரவைத் தேடிக்கொண்டு வருகின்றனர். தமிழ்நாட்டிலோ ஓமந்தூரார் கட்சியொன்று எந்த நேரத்திலும் முளைக்கலாம் என்ற சூழ்நிலை நிலவி வருகிறது. இத்தனை குழப்பத்திற்கிடையில் இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்று கிருபளானியின் 'ஜனநாயக முன்னணி' பற்றிய செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. தோழர் கிருபளானி உத்தமர் காந்தியாரின் உண்மையான சீடர். காங்கிரஸ் ஆட்சி காந்திய வழியிற் செல்லவில்லை என்பதை அவர் கண்டார். காங்கிரஸ்காரர்கள் பிரிட்டிஷார் ஆட்சியில் சொல்லிய குறைகளை நினைவுபடுத்திக் கொண்டார். அக்குறைகள் பன்மடங்கு தம் தோழர்கள் நடத்தும் ஆட்சியில் அதிகமாகியிருக்கும் அலங்கோலத்தைப் பார்த்தார். காங்கிரஸ் தலைவராக இருந்தார்; நேரு சர்க்கார் தம்மைக் கலவாமலேயே பணியாற்றுவதை அவரால் பொறுக்க முடியவில்லை. தலைமைப் பதவியிலிருந்து விலகினார். மறுபடியும் தாண்டன் தலைவர் போட்டிக்கு நின்றபோது தாமும் நின்றார். காங்கிரஸில் நுழைந்து சீர்திருத்தம் செய்யலாம் என எண்ணினார் போலும்! தாண்டன் நிறைய வோட்டுகள் பெற்று காங்கிரஸ் தலைவரானார். கிருபளானி, காங்கிரஸ் கமிட்டிகளில் ஊழல் என்று வாதாடினார். 'ஜனநாயக முன்னணி'யை காங்கிரசுக்குள்ளேயே தோற்றுவித்தார். தம்மைப் போன்று அதிருப்தி கொண்ட பல காங்கிரஸ்காரர்களைத் தம்மோடு சேர்த்துக் கொண்டார். ஜனநாயக முன்னணி வளர்ந்தது. நேருவுக்கும் தாண்டனுக்குமுள்ள கருத்து வேறுபாடு ஜனநாயக முன்னணியை வளர்த்தது என்றுகூடக் கூறலாம். ஒற்றுமைத் தீர்மானங்களைக் காங்கிரஸ் காரியக் கமிட்டி நிறைவேற்றியது. காங்கிரஸ் தலைவரும் கிருபளானியும் கூடிக் கூடிப் பேசினார்கள். நேரு, ஆஸாத், கிருபளானி சந்திப்புகளும் நடைபெற்றன. தேர்தல்

நெருங்கவே ஜனநாயக முன்னணி விவகாரம் தீர்க்கப்பட வேண்டிய கட்டத்திற்கு வந்திருக்கிறது. நேருவின் வேண்டுகோளின் பேரில் ஜனநாயக முன்னணி கலைக்கப்பட்டுவிட்டது. ஆனால் ஏற்பட்ட பிளவுகளும் அதிருப்திகளும் அப்படியே இருக்கின்றன. அதைப் பூசி மறைக்கக் காங்கிரஸ் காரியக் கமிட்டி சில முயற்சிகளை மேற்கொள்ளுமெனத் தெரிகிறது. எப்படியானாலும் ஜனநாயக முன்னணியைச் சேர்ந்தவர்கள் காங்கிரசுக்குள் தாங்கள் அமைத்துக் கொண்ட கட்சியைக் கலைத்துவிட்டார்களே ஒழியக் காங்கிரஸை விட்டு வெளியேறி வேறு கட்சிகள் அமைக்கமாட்டார்கள் என்பதற்கு யாதொரு உறுதியும் இல்லை. ஏனெனில் ஆந்திராவிலும், உத்தரப் பிரதேசத்திலும், பீகாரிலும் ஜனநாயக முன்னணியைச் சேர்ந்தவர்கள் ஏற்கனவே வேறு கட்சிகளைத் துவக்கிவிட்டார்கள். இம்முடிவை மாற்றிக்கொள்ளப் போவதில்லையென்றும் அவர்கள் அறிவித்துவிட்டார்கள். எனவே ஜனநாயக முன்னணி கலைப்பு காங்கிரஸிற்குப் பகைமையைத்தான் வளர்த்திருக்கிறது.

இவ்வாறு அரசியல் கட்சிகள் தேர்தல் உற்சாகம் காட்டி வருகின்றன. பொது மக்கள் கட்சிகளின் திட்டத்தை உணர்ந்து வாக்களிக்க முன்வரவேண்டும். ஆளுகிற கட்சியாகக் காங்கிரஸ் இருப்பதால் அதற்குத் தேர்தலில் வெற்றி பெற எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன. பல ஊழல்கள் மலிந்ததாக அது தோற்றமளித்தால் கூடப் பண வசதி, ஆள் வசதி, செல்வாக்குப் பெற்றுள்ள கட்சி காங்கிரஸ்தான்! ஆனால் காங்கிரஸ் ஆட்சியின்மீது மக்கள் அடைந்துள்ள வெறுப்புக்கு அளவே இல்லை. இனி ஆட்சியே வேண்டாமென்று சொன்னாலும் சொல்வார்களே ஒழியக் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டுமென்று யாரும் விரும்புவதாகத் தெரியவில்லை. ஆனால் எதிர்க் கட்சிகள் பலமான முன்னணி அமைத்து ஒன்றுபட்டு வேலை செய்தாலொழியக் காங்கிரஸ்காரர்கள்தாம் மீண்டும் பதவிக்கு வருவார்கள் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. ஒரு ஸ்தானத்திற்குக் காங்கிரஸில் ஒருவர், இந்துமகாசபையில் ஒருவர், கம்யூனிஸ்ட் ஒருவர், சோஷலிஸ்ட் ஒருவர் என்று ஆட்களை நிறுத்தினால் காங்கிரஸுக்குத்தான் நிறைய வாக்குகள் கிடைக்கும். காங்கிரஸை எதிர்த்து வாக்களிக்க எண்ணுவோர் பல பிரிவினராகப் பிரிந்து சக்தி இழந்துவிடுவர். இந்த நிலைமையைத் தவிர்க்க வேண்டுமானால் ஒத்த கருத்துள்ள முற்போக்குக் கட்சிகள் கூடி, தங்களனைவருக்கும் பொதுவாகத் தேர்தல் திட்டமொன்றைத் தயாரித்துக்கொண்டு, மக்களிடம் வாக்குரிமை பெற முன்வருவார்களானால் வெற்றி திண்ணம். காங்கிரஸ் தோல்வியடைவதையும் கண்ணால் காண முடியும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில்; அல்லது

சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையில் இத்தகைய முயற்சிக்கு வழியிருக்கிறது. தனித் தனியே முயன்று வீணுக்குப் பாடுபடாமல் சக்திகளை ஒன்று சேர்க்கும் பணியில் முற்போக்கு எண்ணங்கொண்டோர் ஈடுபடவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இம்முயற்சியில் தலைக் கொடுத்து இறங்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர். தமிழ் நாட்டில் மக்களிடம் நெருங்கிய தொடர்புள்ள கட்சிகளில் செல்வாக்குப் பெற்றிருப்பது திராவிட முன்னேற்றக் கழகந்தான் எனில் அது மிகையன்று. பதவிக்கு வந்து சாதிக்கப்போவது யாதுமில்லை—இப்போதுள்ள அதிகாரங்களைக் கொண்டு, யாரும் எதையும் செய்துவிட முடியாது என்ற கருத்துக்களை அனைவரும் ஒப்புக்கொள்ளத்தான் செய்வர். என்றாலும் மக்களிடையில் வளர்ந்துள்ள காங்கிரஸ் எதிர்ப்புணர்ச்சியைத் திராவிட முன்னேற்றக் கழகம்தான் உருவாக்கியிருக்கிறது. அந்த உணர்ச்சியைத் தேர்தலில் சரிவரப் பயன்படுத்தவேண்டியது தலைவர்களின் பொறுப்பாகும்.

காங்கிரஸை வேண்டாமென்று உதறிவிட்டுப் புது வேடதாரிகளைத் தங்கள் பிரதிநிதிகளாக அனுப்ப மக்கள் தயாராக இல்லை. "காங்கிரஸுக்கு எங்கள் வாக்குரிமையை வழங்கமாட்டோம், பின் யாருக்கு வழங்குவது?" என்று குழம்பிய உள்ளத்துடன் கேட்கும் பொதுமக்கட்குத் திட்டமான பதிலைத் தி. மு. கழகம் தந்தாக வேண்டும். ஒதுங்கி நிற்கிறோம் என்று அறிவித்துவிடுவதால் மக்கள் மீண்டும் மீண்டும் உதவாக்கரைகளையே தேர்ந்தெடுக்கத்தானே உதவியவர்களாவோம் என்பதை உணரவேண்டும். அல்லது குறிப்பிட்ட முற்போக்குக் கட்சிக்குத் தங்கள் ஆதரவு உண்டு என்று அறிவித்துவிடவேண்டும். இவற்றைத் தலைவர்கள் எண்ணிப் பார்த்து ஆவன செய்வார்கள் என எதிர்பார்க்கலாம்.

மக்கள் கடமை தெளிவாக வரையறுக்கப்படவேண்டும். வான்கோழிகளின் ஆட்டமே தேர்தலாக முடிந்துவிட்டால், வெற்றி ஏதாவதொரு வான்கோழியின் பக்கமே சேரும் என்பதைப் பொறுப்புள்ள யாரும் மறந்துவிடக்கூடாது. மறந்தாலும் மக்கள் அவர்கட்கு நினைவுபடுத்த வேண்டும். அப்போதுதான் தேர்தலுக்காக மட்டும் உற்சாகம் காட்டும் போலிகளை ஒழிக்க முடியும்!

காலமும் கருத்தும்

அமெரிக்க உதவி

"இலவசமாகக் கோதுமை அளிக்கப் போகிறோம் இந்தியாவுக்கு" என்று பிரமாதமாக விளம்பரப்படுத்தினார்கள் அமெரிக்கர்கள். ஆனால் அந்தக் கோதுமை நமக்கு வந்து சேருவதற்குள் ஒன்று நம் பஞ்சமெல்லாம் தீர்ந்துவிடவேண்டும்; அல்லது மக்கள் 'உணவே வேண்டாத நிலை'யை அடைந்துவிடவேண்டும்: அத்தனை தாமதம் செய்கிறது அமெரிக்க சர்க்கார். தங்கள் உதவிக்கு நிபந்தனைகள் விதிக்கிறார்கள், அவர்கள்: ஆனால முதலமைச்சர் நேரு, எந்தவித நிபந்தனையோடு கூடிய உதவிக்கும் நாங்கள் கட்டுப்பட மாட்டோம் என்று அறிவித்தாரல்லவா? அந்த அறிவிப்பைக் கேட்ட அமெரிக்கர்கள் மறுபடியும் தங்கள உதவியைப் பற்றிய ஆலோசனையை நிறுத்தி விட்டார்களாம். எனவே அமெரிக்க உதவி கிடைப்பது அருமை என்றுதான் நாம் முடிவுகட்ட வேண்டும். ஆனால் எதிர்பாராமல் பாகிஸ்தான், சீனா, பர்மா, முதலிய நாடுகள் நமக்கு உணவுப்பொருள்களை அனுப்புகின்றன. ரஷ்யாவும் அனுப்புவதற்கு முன்வந்திருக்கிறது. இந்தச் செய்திகளைப் பார்த்தும் அமெரிக்கர்களுக்கு ஆர்வம் பிறக்கவில்லையென்றால், அமெரிக்க மனோபாவம் எது என்று நாம் புரிந்துகொள்ளச் சந்தர்ப்பம் ஒன்று கிடைத்ததென்பதைத் தவிர வேறு என்ன கூறவிருக்கிறது? நேரு சர்க்கார் இதனை உணர்ந்து அமெரிக்காவுக்கு "உங்கள் உதவி வேண்டியதில்லை, ஐயா" என்று அறிவித்து விடுவார்களானால் எவ்வளவோ பெருமையா யிருக்கும்.

மே விழா!

மே விழா உலகெங்கும் நடைபெற்றிருக்கிறது. பாட்டாளி மக்களின் ஒருமித்த குரலை அன்று உலகமக்கள் கேட்டனர். கம்யூனிஸ்ட் நாடுகளிலும் சரி, மற்ற 'ஜனநாயக' நாடுகளிலும் மே விழா சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. இந்தியாவிலும் ஏராளமான நகரங்களில் உழைப்பாளிகளின விழா நிகழ்ந்திருக்கிறது. உழைப்பின் பெருமையை உலகம் உணரவேண்டும்; உழைப்பவர்களுக்கு முதலிடம் தரப்படவேண்டும். உழைப்பே செல்வம் என்று கருதப்படும் நாளே, மக்கள் சமுதாயம் முன்னேறும் நன்னாளாகும். "உழைப்வர்க்கே உலகம்" என்றும் "புதியதோர் உலகு செய்வோம்" என்றும் எழுப்பப் பெறும் முழக்கங்கள் அந்நாளில்தான் உருவம் பெற முடியும். இந்த ஆண்டு நிகழ்ந்

திருக்கிற மே விழா இங்கிலை நோக்கி உலகை நடத்திச்செல்லு மென நாம் நம்புவோமாக.

பாரசீகம்

பாரசீகத்தில் இப்போது புதுக் குழப்பம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. ஈரான் சர்க்கார் தங்கள் நாட்டிலுள்ள பெட்ரோல் தொழிலைத் தேசியமயமாக்கும் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். இதுவரையில் பிரிட்டிஷ் கம்பெனி ஒன்று பாரசீக எண்ணெய்த் தொழிலை ஏக போகமாக அனுபவித்து வந்தது. ஈரான் சர்க்காருக்குக் கப்பம் போலச் சிறு தொகை கட்டுவதோடு சரி. மற்றபடி லாபம் முற்றும் அந்தக் கம்பெனியைச் சேர்ந்துவந்தது. மேலும் பெட்ரோல் எவ்வளவு முக்கியமான பொருள்! உலக உற்பத்தியில் குறிப்பிடத் தக்க பகுதி ஈரானில்தான் கிடைக்கிறது. அதைத் தன் விருப்பப்படி யாருக்கு வேண்டுமானாலும் வழங்கும் உரிமையையும் அந்தக் கம்பெனி வைத்துக்கொண்டது. இந்த உரிமைக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கிறது ஈரானின் தேசிய உடைமைச் சட்டம் இதன் விளைவுகள் எப்படி இருக்குமோ? ரஷ்யாவும் அமெரிக்காவும் சந்திக்கும் இடமாகக்கூடப் பாரசீகம் மாறலாம். வல்லரசுகளின் போக்கு அப்படித்தான் இருக்கிறது. பொறுத்திருந்து பார்க்கலாம்.

தமிழ்த் திருவிழா

யாழ்ப்பாணத்தில் நான்காவது தமிழ்த் திருவிழா சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் நடத்தி வரும் இவ்விழா, இப்பொழுது தரும் பயனைவிட இன்னும் மிகுதியான பயனை நல்கவேண்டுமெனத் தமிழ்மக்கள் எதிர் பார்ப்பது இயற்கையே. அரசாங்கம் தமிழ்வளர்ச்சிக் கழகப் பரிசுத் திட்டங்களுக்கு உதவி வருகிறது. கலைக்களஞ்சியம் தயாரிக்கும் பெரும் பணிக்கும் சர்க்கார் உதவி கழகத்திற்குக் கிடைக்கிறது. இவ்வாறு சர்க்கார் உதவிபெற்றுவரும் கழகம், தமிழ் வளர்ச்சிக்குப் பொது நிலையில் நின்று தொண்டாற்றுவதே யாரும் விரும்பத்தக்கதாகும். 'தமிழ்வளர்ச்சி' என்பது தமிழ் நாட்டில் யாரும் விரும்பும் ஒன்று. இயற்கைக்கு மாறாக ஆர்வம் காட்டாமலிருக்கும் சிலரைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. மற்றவர்கள் அனைவரும் ஒருமித்துச் செயலாற்றலாம். அரசியல் கட்சி வேறுபாடுகள் தமிழ் வளர்ச்சியில் குறுக்கிட வேண்டியதில்லை. கட்சி அரசியல் போன்று தமிழ்வளர்ச்சியும் குறிப்பிட்ட சிலரின் போக்குப்படி அமையவேண்டுமென்பதில்லை. தமிழ் வளர்ச்சிக் கழகம் தோன்று முன்பே, தமிழ் வளர்ச்சியில் ஆர்வம் காட்டிப் பயன்கண்ட பெரியோர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். தமிழ்வளர்ச்சிக் கழகம் விருப்பு வெறுப்பற்றுப் பணியாற்ற வேண்டுமென்பதே நம் விருப்பமாகும்.

வெறும்  கலாட்டா 

"அசோகச் சக்கரப்" பள்ளிக்கூடத்தில் ஒரே தகராறு; குழப்பம்! உள்ளுக்குள்ளேயே கலாட்டா 'கர்புர்' என்று உறுமிக் கொண்டிருக்கிறதாம! அங்கே 'உழைத்து'க் கொண்டிருந்த பெரிய பெரிய பயில்வான்கள் எல்லாம ஒருவரை யொருவர் முறைத்துக் கொண்டு பள்ளிக் கூடத்தை விட்டு வெளியேற ஆரம்பித்து விட்டார்கள்! இன்னும் சிலர் வெளியேறுவதற்கு 'நாள் நட்சத்திரம்' பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கேள்வி!

ஏன் இப்படிப் பயில்வான்களெல்லாம் திடீர்த் திடீரென்று விலகிப் போகிறார்களென்று யோசித்தேன். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. என் நண்பர் விஷயத்தை விளக்கினார்.

சில ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு குஸ்திப் பந்தயத்தில் 'அசோகா'ப் பள்ளிக்கூடத்துப் பயில்வான்கள் தான் எல்லோரையும் 'பீட்' அடித்தார்கள். அவர்கள் ஜயித்ததற்கு முக்கிய காரணம் ஜனங்களின் அமோகமான 'குருட்டு' ஆதரவுதான். அப்படியிருந்தும், கடைசியில் பந்தயத்தில் ஜயித்த பயில்வான்கள் தங்களுக்கு ஆதரவு தந்த ஜனங்களிடமே தங்கள் 'கைவரிசை'யைக் காட்ட ஆரம்பித்து விட்டார்கள்! பயில்வான்களுக்கு முன்னால் பாமர மக்கள் என்ன செய்ய முடியும்? இதனால் ஜனங்களுக்கு அசோகாப் பள்ளிக்கூடத்தின் மீதே ஒரே வெறுப்பு ஏற்பட்டு விட்டது. இனிம்மல் மஞ்சள் சல்லடம் கட்டிய பயில்வான்கள் எங்கேயாவது தலை காட்டினால் நொறுக்கி விடுவதென்றும் தீர்மானித்துவிட்டார்கள்.

நிலைமை இப்படி இருக்க இந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு பெரிய 'போட்டா போட்டி-காட்டாக் குஸ்தி' நடைபெறப் போகிறது. இதற்கு முன் நடந்த குஸ்திகளை யெல்லாம் பணக்காரர்களும் மற்றும் ஒரு சிலர்களுமே பார்க்கலாம் என்றிருந்தது. ஆனால் இப்போது நடக்கப் போகும் குஸ்தியை இருபத்தொரு 'வயது வந்த' எலலா ஜனங்களும் பார்க்கலாம். எனவே குஸ்திடைப் பார்க்கும் கூட்டம் பெரிசாகத்தான் இருக்கும்.

இந்தக் 'குஸ்தி'யில் கலந்து கொள்ள ஏராளமான பள்ளிக்கூடங்கள் பயில்வான்களைத் தயார் செய்து கொண்டிருக்கின்றன. வழக்கம்போல 'அசோகா'ப் பள்ளிக்கூடத்திலிருந்தும்

பயில்வான்கள் வரப் போகிறார்கள். ஆனால் இந்தப் பயில்வான்களுக்கு சேரப்போகும் கதியை முன் கூட்டியே தெரிந்து கொண்ட ஒரு சில புத்திசாலிப் பயில்வான்கள்தான் அசோகாப் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறுகிறார்களாம்! இப்படி வெளியேறிய பயில்வான்களெல்லாம் ஒன்று சேர்ந்து புதிய பள்ளிக்கூடம் ஒன்று திறந்திருக்கிறார்களாம்! குஸ்திப் பந்தயத்திற்கே ஒரு தலைமுழுக்குப் போட்டு விட்டு 'அக்கடா' என்று எங்கேயாவது போய் இராமல்...ஹூம்! எந்தச் சல்லடத்தைக் கட்டிக் கொண்டு வந்தாலும் ஜனங்களுக்குத் தெரியாதா, இவர்களுடைய யோக்கியதை!

○

"தேவை! தேவை!

பயில்வான்கள் தேவை! இந்த ஆண்டு டிஸம்பர் மாதத்தில் நடக்கப்போகும் குஸ்திப் பந்தயத்திற்கு வாட்டசாட்டமான மோட்டாப் பயில்வான்கள் தேவை! பயில்வான்கள் படித்திருக்க வேண்டுமென்று அவசியமில்லை! தினசரி ஆயிரம் கஸரத்துகளும் ஐயாயிரம் 'பஸ்கி'களும் போடத் தெரிந்திருந்தால் போதும். குஸ்தியில் நாங்கள் தரும் சல்லடத்தைக் கட்டிக் கொண்டுதான் கோதாவில் இறங்கவேண்டும். விருப்பமுள்ளோர் விண்ணப்பிக்கலாம்! ...."

ஒரு குஸ்திப் பள்ளிக்கூடம் இப்படி ஒரு விளம்பரம் கொடுத்திருக்கிறது. இந்தப் பள்ளிக்கூடம் நெடுநாட்களாக அடைக்கப்பட்டுக் கிடந்தது. வரப்போகும் குஸ்திப் பந்தயத்திற்காக இவர்கள், தங்கள் பள்ளிக்கூடத்திற்குப் புதிய 'பெயர் சூட்டு விழா' ஒன்று நடத்தி ஸ்பெஷல் கோதா வெட்டியிருக்கிறார்கள்! என்னவோ, இவர்கள் தோற்றுப் போனாலும் மீசையில் மண் ஒட்டாமல் இருக்கவேண்டும். அவ்வளவுதான்.

மீசை என்றவுடன் அதை ஒட்டி அழகான தாடியும் நம்கண்களுக்கு முன்னால் வந்து நிற்கிறது. இந்தத்தாடி மீசைகளே ஒரு சில முகங்களுக்குத்தான் தனி அழகு தருகிறது என்று தாராளமாகச் சொல்லலாம். காலஞ்சென்ற உலக மேதை பெர்னார்ட்ஷாவின் தாடியும் மீசையும் பார்ப்பதற்கே சகிக்காது! ஆனால் கவிஞர் தாகூரின் தாடியோ உலகப் பிரசித்தி பெற்றது. பெர்னார்ட்ஷாவே அந்தத் தாடியின் அழகில் சொக்கிப்போய் அதை ஆசையோடு தடவிக் கொடுத்திருக்கிறாராம்!

தென்னாட்டில் நன்றாக வேரூன்றியிருக்கும் ஒரு குஸ்திப் பள்ளிக்கூடத்து வாத்தியாருக்குத் தாகூரைப் போன்ற அழகான தாடி உண்டு! இந்தத் தாடிக்காரப் பயில்வானைக் கண்

டாலே அசோகாப் பள்ளிக் கூடத்துப் பயில்வான்களுக் கெல்லாம் ஒரே தொடை நடுக்கம்தான்! எங்கே இந்தப் பயல் வேறு கோதாவில் இறங்கி நமது மானத்தை வாங்கிவிடுவானோ என்ற பயம். ஆனால் தாடிக்காரப் பயில் வானும் அவரது சிஷ்யப் பயில் வான்களும் குஸ்திப் பந்தயத் தில் கலந்துகொள்வதில்லை யென்று சொல்லிவிட்டார்கள! இருந்தாலும் ஒரு சில சல்லிப் பயில்வான்களும் கிண்ணை தூங்கிப் பயில்வான்களும் சந்து பொந்துகளில் நின்று முக்காடு போட்டுக்கொண்டு திட்ட ஆரம்பித்தார்கள். 'தாடி ஒழிக! மீசை ஒழிக' என்று கையிலே கத்தியையும் தீட்டுக் கல்லையும் தூக்கிக்கொண்டு கூச் சல் போட ஆரம்பித்துவிட் டார்கள். இன்றைக்கு அவர்கள் கவாத்துப் பழகும் அசோகாச் சக்கரப் பள்ளிக்கூடத்துப் பிரதம வாத்தியாரே கண்றுவி யான செம்மறியாட்டுத் தாடி வைத்துக்கொண்டிருப் பது அவர்கள் கண்களுக் குத் தெரியவில்லை போலும்! திட்டியாவது முட்டியாவது ஜயித்துவிடலாமென்று குருட் டுத்தனமாக நம்பிக் கொண்டிருக் கிறார்கள்! பாவம்! இன்னும் கொஞ்ச நாளைக்காவது அவர் கள் நன்றாக இருக்கட்டும்!

— கில்லாடி

சிறந்த தயாரிப்பு

நீங்கள் அன்புடன் அனுப்பிய 'பொன்னி' மலர் கிடைத்தது. அன்புக்கு நன்றி. சிறந்த தயாரிப்பு. கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து. கவிஞரைப்பற்றிப் பலரது எண்ணங்களைத் தொகுத்திருப்பது பாராட்டத்தக்கது. சுவை மிகுந்த பகுதியாகத் திகழ்கிறது அது.

சென்னை
4-5-51 வல்லிக்கண்ணன்

○●○

கருத்துச் சோலை

திராவிடத்தின் புகழுக்கு இலக்காகி இருக்கும் நமது புரட்சிக் கவிஞர் அவர்களின் மணிவிழாவை நேரில் காணும் வாய்ப்பிழந்த என் போன்ருரை, மகிழ்வித்தது தங்களின் மாண்பு மிக்க மணிவிழா மலர்! புத்துலகப் பாதை அமைக்க அரும்பணியாற்றி வரும் புலவர் பெருமானுக்கு நீங்கள் தொகுத்து அணிவித்த புகழ் மாலையைக் கண்டு களிப்புற்றேன். பாரதிதாசரின் பண்பை, மாண்பை, அறிவின் திண்மையைத் திகட்டாத விருந்தாக மலர் வட்டிலில் கன்னித் தமிழின் இனிமை சேர்த்து அளித்தமைக்கு அன்பு கலந்த நன்றி! தமிழகத்தில் பாரதிதாசன் பரம்பரையைத் தோற்றுவித்த பெருமைக்குரியது 'பொன்னி'தான்! கவிஞரின் மணி விழாவுக்கென மலர் வெளியிட்டதும் 'பொன்னி'தான்! கவிஞரின் சொல்லைச் செயலில் காட்டும் ஆர்வத்தின் எல்லைக்கு என்றும் முடிவிருக்காதென எண்ணுகிறேன். மணி விழா மலர் கருத்துச் சோலையாகக் காட்சி தருகிறது. முகப்புப் பட அமைப்பு அருமை! அருமை! இனி வெளிவரும் ஒவ்வொரு இதழும் இத்தகைய அறிஞர்களின் உருவந் தாங்கி வருமானல் என் நீண்ட நாள் ஆவல் நடைமுறையில் வந்தது குறித்து மகிழ்வேன். 'பொன்னி'யின் முகப்புப் பட மாற்றத்தைத் தமிழர் அனைவரும் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை!

பாகலூர்
2-5-51 க. கூடலரசன்

○●○

நோபில் பரிசு

பொங்கல் மலருக்குப் பின் புரட்சிக் கவிஞருக்கெனப் புதிய மலரொன்றைப் பூக்கச் செய்திருக்கிறது பொன்னி. மலரில் மணம் வீசும் மணி விழா நிகழ்ச்சிகள், அறிஞர் திரு. வி. க. வின் வாழ்த்து, பாரதிதாசனின் பகுத்தறிவுக் கவிதைகள், கருத்துக் குணவளிக்கும் கவியரங்கம், தமிழகப் பேரறிஞர்களின் புகழ் மாலை இவற்றைக் கண்ணுறும் தமிழ்ப் பெருமக்களின் உள்ளத்திலே கவிஞர் உறைவிடம் பெறுகிருர். புரட்சிக் கவிஞருக்குப் பொன்னி தனி மலரளித்

துப் போற்றுவித்தது புதிய தோர் நோபிள் பரிசு என்று பெரு மகிழ்ச்சியடைகிறேன். வாழ்க கவிஞர். வளர்க பொன்னி.

திருச்சி
4-5-51

என். தங்கவேலு

○●○

அத்தனையும் மணிகள்!

மணம் வீசி மணி விழா மலர் வந்தது. பிரித்துப் பார்த்தேன். ஆ! அத்தனையும் மணிகள். இத்தனைக்கும் விலை எட்டணா. ஆம். எட்டணாத்தான். என்றால் நம்ப முடியவில்லை. ஆனால் முகப்பிலே கவிஞர் பாரதிதாசன் கண்டிப்பான பார்வையில் "ஆம். எட்டணாத்தான்" என்று கூறுகிறார். நம்பலானேன்.

ஸ்ரீரங்கம்
4-5-51

ஏ. எஸ். ராகவன்

○●○

கருவூலம்

கவியரசர் மணி விழா மலர் கவின்மிகு கருத்தோவியங்கள் நிறைந்த கருவூலம்! மலரைப் புரட்டும்பொழுதும், திராவிடத்தின் தன்மானக் கவிஞர்களின் கவிதை அரங்கில் நுழையும் பொழுதும் உணர்ச்சி எழுகின்றது! உள்ளங் குளிர்கின்றது!

அறிஞர் கா. அப்பாத்துரையாரின் அழகிய அப்பட்டமான மொழிபெயர்ப்பைப் படிக்கும் பொழுது, முன்பு கண்ணீரோடு படித்த,

"தாயெழிற் றமிழை, என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந் தென்றன் செவி
யில் வந்து
பாயு நாள் எந்த நாளோ,
ஆரிதைப் பகர்வார் இங்கே"

என்னும் நம் கவியரசரின் கவிதையை ஆனந்தத்தோடு படிக்கத் துடித்தது என் மனம்!

ஆம். தமிழரின் கவிதைகளை-கவியரசரின் கவிதைகளை ஆயிரம் மொழியிற் காண இப்புவி அவாவுகிறது! இது பாவலருக்குப் புகழ் மாலை அணிவித்துள்ள அறிஞர்களின் உரையிலே நன்கு புலப்படுகிறது! "எந்நாளோ!" என்று ஏங்கும் உள்ளங்கட்கு, அந்நாள் அண்மையில்தான் உள்ளதென்பதை அறிவிக்கின்றன அக்கருத்துரைகள்!

வேலூர்
3-5-51

வேலை-வில்லவன்

ஒரு வார்த்தை

க. செல்லையா

ஓடையிலே நீர்சுமந்து செல்லும் போதுன்
ஒய்யார நடைகண்டேன்! உடை திருத்தும்
சாடையிலே உன்நெஞ்சின் சாள ரத்தைத்
தள்ளாடும் கால்களிலே தவிக்கும் நெஞ்சைக்
கூடவரும் தோழியரின் மத்தி யில்நான்
குறிப்பாகக் கண்டறிந்தேன்! மையல் கொண்டேன்
ஈடற்ற எழிலுடையாய்! எனக்கோர் வார்த்தை
இசைவாக உரைத்திட்டால் இழப்ப தென்ன?

வீடிருக்கும் தூரமோ விரற் கடைதான்!
விரட்டிவரும் புலியேதும் இல்லை யேனும்
ஓடாமல் ஓடுவதேன்! உடை தடுக்கி
ஒடிந்துவிழும் பாவனையேன்? அயலில் கண்கள்
தேடாமல் தேடுவதேன்? மிஞ்சி விட்டால்
தெரிந்துவிடும்; ஊர்சிரிக்கும் எனும்நி னைப்பா?
ஏடிஇக் கள்ளமெலாம் எனக்கோர் வார்த்தை
இன்பமுற உரைத்திட்டால் இழப்ப தென்ன?

அடியெடுத்து வைக்கின்றாய்! என்நெஞ் சத்தை
அமிழ்த்துகின்றாய் ஆசையெனும் கடலி னுள்ளே!
இடைநெளியப் பின்வாங்கும் கைதான் சற்றே
இசைவாக முன்னேறும் போதில் அந்தக்
குடந்ததும்பும் நீர்போல எனது நெஞ்சிற்
கொந்தளிக்கும் உணர்ச்சிகளை அறியாயோ? வில்
இடங்கொண்ட விழியாளே எனக்கோர் வார்த்தை
இசைவாக உரைத்திட்டால் இழப்ப தென்ன?



தமிழ் விருந்து

"தமிழ்த்தும்பி"

4. பெண்மைக்கு அழகல்ல

மங்கல ஒலிகள் பல முழங்க, கூடல்மாநகரில் காலை மலர்ந்தது. விடி வெள்ளியிலிருந்தே நகரம் கோலாகலத்திலே புரண்டது. இரவோடு இரவாகக் கட்டப்பட்ட தோரணங்கள் காற்றிலே மோதிச் சலசலத்தன. முக்கியமான இடங்கள் என்று மக்களால் கருதப்பட்ட இடங்களிலெல்லாம் மீனக்கொடி மிக உல்லாசமாகப் பறந்து கொண்டிருந்தது. மகிழ்ச்சிப் பெருக்கிலே திளைக்க வேண்டிய நன்னாள் என மக்கள் அந்நாளைக் கருதினர். அன்று போரிலே வெற்றி பெற்ற பாண்டிய மன்னர் போர் முடிந்தபின் முதன் முதலாகப் பவனி வருவதாக இருந்தார். ஆகவே, குடிமக்களின் அளவு கடந்த ஆனந்தத்துக்கும் ஆத்திரத்துக்கும் காரணம் இருந்தது. மதுரையே திமிலோகப்பட்டது.

பொற்கொடியும் அருணோதயத்துக்கு முன்னமேயே துயில் நீத்தாள். தூக்கம் கலைந்தவுடனே அவள் முதன் முதலாக நினைத்தது அன்று நடக்கவிருந்த முக்கிய நிகழ்ச்சியைத்தான். தன் நாட்டு மன்னர் — அண்மையில் மாற்றாரோடு வீரச் சமர் புரிந்து வாகைமாலை சூடிய தன் மக்கட் பிரதிநிதி — அன்று மக்களுக்குக் காட்சியளிக்கிறார். போரின் போது மக்கள் காட்டிய சாமர்த்தியத்தை மெச்சி அவர்களைப் பாராட்டும் ஒரே நோக்கோடு சின்னச்சின்னத் தெருவெல்லாம் வலம்வந்து அவர்களை மகிழ்விக்கப் போகிறார் என்ற எண்ணம் தான் அவள் உள்ளத்தை வளைய வளையச் சூழ்ந்து கொண்டது. அவர் செல்லும் பாதையை அழகுபடுத்தி அவரை நல்ல முறையிலே வரவேற்க ஆவல் கொண்டாள் அவள்.

படுக்கையை விட்டுப் பாய்ந்தெழுந்தாள்; பாயலைச் சுருட்டி அப்புறப் படுத்தினாள். பல் துலக்கி முகங்கழுவினாள். தன் வீட்டு வாசல் முகப்பிலே கிடந்த தூசி, புழுதியை நீக்கினாள். சிறு தூசுகள் பறக்காதிருக்கத் தண்ணீர் தெளித்தாள். மாக்கோலத்தையும் குங்குமச் சாற்றையும் கொண்டுவந்து தன் கைத்திறனைக் காட்டத் தொடங்கினாள். தன் வீட்டு வாசல் அன்று சாதாரண முன் வாயிலல்ல — வீரத்தின் விளக்கம் ஊர்ந்து செல்லும் அரும்பேறு பெற்ற நிலப்பரப்பு. ஆகையால் தன் நாட்டுச் செல்வன் செல்லும் பாதையை அழகு

படுத்தத், தன் கலைச் செல்வத்தை அர்ப்பணித்தாள் அவள். முடிவில், தன்னால் இவ்வளவு நன்றாக அலங்கரிக்க முடியும் என அவள் கனவுகூடக் கண்டதில்லை. தன் தலைவன் செல்லும் வழி என்ற நினைவு தன்னைக் கோலக் கலையில் சிறந்தவள் ஆக்கிவிட்டதோ என அவள் ஐயப்பட்டாள்.

குளித்தாள்; புத்தாடை உடுத்திக் கொண்டாள்; கூந்தலைப் பாங்குற முடிந்து கொண்டாள்; மலர் சூடினாள்; நெற்றியிலே திலகம் இட்டுக் கொண்டாள். அணி வகைகளில் சிறந்தது என்று அவள் அழகுணர்ச்சி அறுதியிட்டுச் சொன்னதை அணிந்து கொண்டாள். நகங்களிலே செம்பஞ்சுக் குழம்பு இடம்பெற்றது. அகன்று நீண்ட கண்களிலே அஞ்சனம் அமர்ந்தது.

இசை முழக்கம் காற்றிலே கேட்டது. கூர்ந்து கேட்டு, அரசர் வருகிறார் என்பதை இசை முழக்கம் தெரிவிக்கிறதா என்பதை ஐயமின்றித் திட்டமாக அறிந்து கொண்டாள். மீதி இருந்த சில்லரை அழகுக் குறிப்புகளை அவசர அவசரமாக முடித்துக் கொண்டாள். மேன்மாடியிலே மலர்க் கூடையோடு வந்து நின்று கொண்டாள். மலர் வகை மன்னர்மீது அர்ச்சிக்கப் பெறும் பேறு பெற்றவை என்று மலர்களிடம் பேசினாள் அவள். தொலை தூரத்தே மீனக்கொடி வானை அளாவி ஊசலாடிக் கொண்டிருந்தது. சிறிது சிறிதாகப் பாண்டியன் புகழ்க் கீதங்கள் உரக்கக் கேட்கத் தொடங்கின; அதாவது அரசர் பக்கத்திலே நெருங்கிக் கொண்டிருந்தார். கொடியும் ஆடி அசைந்து அவளை நெருங்கிக் கொண்டிருந்தது. ஆயிற்று. இதோ தனக்கு மிக அண்மையில் மக்கள் கூட்டம் வந்துவிட்டது! வாழ்த்தொலி காதைப் பிய்த்தது! இதோ மன்னர் வந்துவிட்டார்.

அரசர் யானைமீது அமர்ந்திருந்தார். தனக்கும் அவருக்கும் இடையே சிறிது தூரம் இருந்தபோது மன்னர் முகத்தை அம்பாரி மறைத்தது. ஆனால், அந்தப் பரந்த மார்பு தெரிந்தது! அங்கே சுடர்விட்ட முத்துமாலை தெரிந்தது! கழுத்திலிருந்து தொங்கிய மலர் மாலை யானை நகரும்போது அப்படியும் இப்படியும் புரளுவது தெரிந்தது! முத்துமாலை அவர் மார்பைச் சேர்ந்ததைப் பொருமையோடு நினைத்தாள். கழுத்தைச் சுற்றியிருந்த மாலை அவளை நோக்கி நகைத்தது. 'மாலை கட்ட உதவின நார்கூட அவளைப் பார்த்துச் சிரித்தது! அகன்ற மார்பிலிருந்து அவள் பார்வை திரண்ட தோளுக்குத் தாவிற்று. தோள்களா அவை? அல்ல வெற்றித் தூண்கள் அல்லவா அவை? கண

நேரம் அவள், உவமைப் பொருள் ஆகிவிட்டதால் பெருமை கொண்ட தூணைக்கூடச் சபித்தாள்! தான், அரசன் மார்பில் புரளும் முத்துமாலை போல—கழுத்தில் தொங்கும் மலர் மாலை போல—அல்ல அதன் நார் போலக் கூடக் கொடுத்து வைத்தவளல்ல! அவள்......சிந்திக்க அவளுக்கு நேரமில்லை. சிந்தனையை விலக்கி அரசருடைய அழகு முகத்தைப் பார்க்க அவள் நாட்டங் கொண்டபோது யானை அவள் வீட்டு வாசலைத் தாண்டிச் சென்றுவிட்டது. ஒளி நிறைந்த அந்த மதிமுகத்தைப் பார்க்கக்கூட அவள் கொடுத்து வைக்கவில்லை. அவ்வளவு நல்வாய்ப்பற்றவளா அவள்? உள்ளம் குமுறிற்று. பொற்கொடி கண்ணீர் வடித்தாள். அர்ச்சிப்பதற்கு அவள் வைத்திருந்த மலர்த் தொகுதியை அவசர அவசரமாகக் கீழே கொட்டினாள். தன்னைச் சார்ந்ததால் அந்த மலர்கள் கூடத் தம் நற்பயனை இழந்துவிட்டன. நல்லவேளை! அந்தப் பாதையையாவது அவை அழகுபடுத்தின.

2

அமைதி இன்றிப் பல நாட்கள் ஓடின. பொற்கொடியின் முன்கையிலே மோதி ஒலித்த சங்க வளையல்கள் பாண்டிய நாட்டைச் சார்ந்தவை. கழுத்தை, பாதத்தை, ஏன் உடம்பின் பல பகுதிகளை அழகு செய்த அணி வகைகள் பாண்டியன் நாட்டுக் கடல் தந்தவையே. அவ்வளவு என்ன? தன் உடலில் பூசப்பட்டுள்ள குளிர்ச்சாந்து கூடப் பாண்டிய நாட்டுப் பொதிய மலை தந்ததே. இதனாலெல்லாம் மன்னர் தந்த வருத்தம் நீங்கவில்லை. தோள்கள் வாட்டம் பெற்றன.

இருப்பின்றித் தவித்த அவள் அடுத்த நாள் வையைக்குச் சென்றாள். பாண்டியன் தந்த துன்பத்தைப் பாண்டியன் வைகையே கொண்டு செல்லட்டும் என்று குடைந்து குடைந்து முழுகினாள். 'குளுகுளு' வென்ற வைகை நீர் அவள் தாப வேகத்தைக் குறைக்கவில்லை. அதே ஆற்றில், அதோ அங்கே பட்டத்து யானை வந்திருக்கிறது! ஆம். நேற்று அரசர் அமர்ந்து பவனி வந்த அதே பெண்யானை! பொற்கொடியின் நீர் நிறைந்த கண்களில் தீப்பொறி பறந்தது. இருந்தும் சீற்றம்கொண்டு என்ன சாதித்துவிட முடியும்? கவ

மல்லிகை


திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழியர் அலமேலு அப்பாத்துரை, தமிழாசிரியர் கா. அப்பாத்துரை எம். ஏ. எல். டி., விசாரத் ஆகியவர்களின் அன்புக் குழந்தை கிருஷ்ணவேணியின் தமிழ்ப் பெயர் சூட்டு விழா ஷ தோழர்களின் திருவல்லிக்கேணி இல்லமாகிய தமிழ் மனையில் மேவிழா நாளன்று (1-5-51) இரவு 9 மணிக்குத் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணாதுரை எம். ஏ. அவர்களால் இனிது நடத்தி வைக்கப்பட்டது. அவ்வமயம் சிறுமிக்கு 'மல்லிகை' என்ற தமிழ்ப் பெயர் அண்ணா அவர்களால் சூட்டப்பட்டது.

லையை மறக்க வந்த இடத்திலே கவலைக்குக் காரணம் கற்பிக்கும் முறையில் அந்தப் பிடி அங்கே இருந்தது.

பொற்கொடி யானையிடம் சொன்னாள்: "ஏ, பெண் யானையே! நீ பெண் குலத்தைச் சேர்ந்தவள்தானே? பின் ஏன் உன் இனத்தைச் சேர்ந்த என்னை அழவைத்து வேடிக்கை பார்க்கிறாய்? எல்லாருடைய வீட்டு முன் னிலையிலும் அன்று எவ்வளவு நேரம் நின்றிருப்பாய்? என் வீட்டின் முன் மட்டும் ஏன் உனக்கு இருப்புக் கொள்ளவில்லை? எல்லாரிடமும் ஒரு மாதிரியாகவும், என்னிடம் மட்டும் வேறொரு மாதிரியாவும் நடந்துகொள்வதில் உனக்கென்ன அந்தக் கொண்டாட்டம்? இந்த ஓரவஞ்சனை உன் போன்ற பெண்ணுக்கு அடுக்குமா? உலகம் ஒத்துக் கொள்ளுமா?

"மடப்பிடி நடையாள் என்று என்னை மற்றவர் மெச்சும் போது உன் கூட்டத்தாரை நான் எவ்வளவு பாராட்டியிருக்கிறேன்! அந்தக் கள்ளங் கபடு அற்ற தன்மைக்கு நன்றி செலுத்தும் முறை இதுதானா? அன்று மட்டும் ஏண்டி துடுக்குத் தனமாக நடந்துகொண்டாய்? அல்லது எப்படி மெல்ல நடப்பது என்பதே உனக்கு மறந்துவிட்டதா? கொஞ்சம் மெதுவாக நடந்தால் நான் மன்னர்பெருமானைக் கண்டு விடுவேன் என்று பொறுக்காமல் தான் அப்படிச் செய்தாயோ? உன்னுடைய அன்றைய நடத்தையைப் பார்த்தால் நீயும் ஒரு பெண்தானா என்ற சந்தேகம் எழுகின்றது. ஏனென்றால் பெண்கள் தெருவிலே ஓடமாட்டார்கள்!

"உன் இனத்தவளையே நீ கொடுமை செய்வதைப் பார்த்தால் நீ பேய்க்கும் மோசமான ஒரு பிறப்பாகத் தான் இருக்க வேண்டும்! எப்படியிருப்பினும் மிருதுத் தன்மையும், இளகிய நெஞ்சமும், கருணை உள்ளமும், பிறர் துன்பம் கண்டுநெக்குருகும் உணர்ச்சிகளையும் கொண்ட



பெண்ணாக மட்டும் நீ இருக்க மாட்டாய். இருக்கவும் முடியாது. ஏனென்றால் உன் அன்றைய நடத்தை அப்படி இருந்தது.''

பொற்கொடி யானையிடம் பேசுகிறாளே, யானை எப்படித் திரும்பப் பேசும் என்று நினைக்கக்கூடாது. காதல்மிகுதி அதிகமாகும்போது உணர்ச்சி வயப்பட்டவர்கள் பேச முடியாத பிராணிகளோடும் உயிரே அற்ற அஃறிணைப் பொருள்களோடும் பேசுவார்கள். அப்பேச்சுக்களில் அறிவின் ஆழத்தைப் பார்த்தால் அவை பிதற்றல்களாகவே இருக்கும். ஆனாலும் உணர்ச்சி வேகத்தை அப்பேச்சுக்கள் நன்றாக எடுத்துக் காட்டும் என்பதில் ஐயமில்லை. இதோ பொற்கொடியின் பேச்சைக் கவனியுங்கள்! அவள் காதல் உத்வேகத்தையும் ஏமாற்றத்தின் எல்லையையும் அந்தப் பாட்டு எவ்வளவு அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது!

எலாஅ மடப் பிடியே! எங்கூடற் கோமான்
புலா அல் நெடு நல்வேல் மாறன்
—உலா அங்கால்
பைய நடக்கவுந் தேற்றாயால் நின் பெண்மை
ஐயப் படுவ துடைத்து.

—முத்தொள்ளாயிரம்.

பெண்கள் முன்னேற்றம்

மங்கை

1

மணிப்பொறி ஆறுமணி அடித்தது. படுக்கையை விட்டெழுந்த சரசா கண்ணைக் கசக்கிக்கொண்டே சோம்பல் முறித்தாள். இன்னும் சிறிதுநேரம் படுத்துக்கொண்டிருந்தால் தேவலை போலிருந்தது. பின் திரும்பிப் பார்த்தாள். அவளுடைய இரண்டு குழந்தைகளும் தூங்கிக் கொண்டிருந்தன. அக்குழந்தைகளின் அமைதியான முகங்கள் அவள் மனத்தில் என்னதான் எண்ணங்களை எழுப்பிவிட்டனவோ, அவளது இதழ்களினோரத்தில் புன்னகை தவழ்ந்தது. பிறகு எழுந்து பிரிந்து கிடந்த தலைமயிரை வாரி முடித்துக்கொண்டு சமையலறையை நோக்கி நடந்தாள். ஒன்பது மணிக்குக் கணவன் அலுவலகம் செல்லவேண்டும். ஒன்பதரை மணிக்குக் குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டும். அதற்குள்ளாகக் காலை உணவைச் சமைத்து முடிக்கவேண்டும். அடேயப்பா, எவ்வளவு வேலை! சிந்தனை செய்தபடியே அடுப்பில் சாம்பலை அள்ளிவிட்டு நெருப்பைப் பற்ற வைத்துக் காப்பி போட்டாள்சரசா. "அம்மா, பல்தேய்க்கக் கரி கொடு!' என்று கூவிக்கொண்டே அங்கே தோன்றினான் பையன் சுந்தரம். கையில் பிடித்திருந்த காப்பி டப்பியைக் கீழே வைத்துவிட்டு மகனின் தேவையைக் கவனிக்கச் சென்றாள் தாய். அடுத்தபடியாகப் பெண் ரத்தினத்திற்குப் பற்பொடியை எடுத்துத் தந்தாள். அடுப்பில் தண்ணீர் கொதித்துக்கொண்டிருந்தது. அதை இறக்கிவிட்டுத் தோசை வார்ப்பதற்காக அடுப்பில் கல் வைத்தாள் சரசா. பல் தேய்க்குமிடத்தில் தமையனுக்கும் தங்கைக்கும் நேர்ந்த சண்டையைத் தீர்த்துவிட்டுத் திரும்புவதற்குள் மணி எட்டரையாகிவிட்டது! அவசரம் அவசரமாகத் தோசை சுட ஆரம்பித்தாள். இதனிடையில், எழுந்துவந்த கணவனை வேறு கவனிக்கவேண்டியிருந்தது! முனகிக்கொண்டே அடுப்படிக்கும் கூடத்திற்குமாக ஓடிக்கொண்டிருந்தாள் சரசா! நெற்றியிலும் கழுத்திலும் வியர்வை வழிந்துகொண்டிருந்தது. தோசை சுட்டு மிளகாய்ப் பொடியும் தயார்செய்து முடித்த சமயம் மணி ஒன்பது. கணவனை உண்ணச் செய்தனுப்பிவிட்டு ரத்தினவுக்குத் தலைமயிரைப் பின்னிவிட்டாள். பிறகு குழந்தைகளுக்கும் ஊட்டிவிட்டுத் தலை நிமிர்ந்து பெருமூச் செறிந்தாள் சரசா! குழந்தைகள் 'ஒருவிதமாகப்' பள்ளிக்கூடத்திற்குச் சென்றுவிட்டனர். மணி பத்து. சரசா இன்னும் பல்தேய்க்கவில்லை. வேலை 'நிறைய'க் கிடக்கிறது! தனிமையாக எவ்வளவு வேலைதான் செய்ய முடியும்? இந்தக் காலத்தில் வேலைக்காரர் அகப்படுவதென்றால் குதிரைக் கொம்பாக அல்லவா இருக்கிறது!

மெதுவாகப் பல்தேய்த்துவிட்டுக் காலைச் சாப்பாட்டை முடித்தாள் சரசா. பின்னர்த் தாறுமாறாகக் கிடந்த பாத்திரங்களை ஒழுங்காக வைத்துவிட்டு வீட்டைத் தூய்மைப் படுத்தினாள். அடுப்பில் உலைவைத்து அரிசியைப் போட்டவள் மணிப் பொறியை நோக்கினாள். மணி பதினொன்று. அவளுக்குக் கோபம் வந்தது. 12-30 மணிக்குள் கணவனும் குழந்தைகளும் வீடு திரும்புவர். "பசி வயிற்றைக் கிள்ளுகிறதே!" என்று பறப்பார்கள் குழந்தைகள்!

இன்று என்ன சமையல் செய்வது? அது ஒரு பெரிய "சிக்கல்" தான்! சரசா யோசித்தாள். நேற்று சந்தையில் வாங்கிவந்த முருங்கைக் காய் ஒரு மூலையில் காட்சியளித்தது. அதை யெடுத்துவந்த சரசா ஒரு தூணோடு சாய்ந்துட்கார்ந்து கொண்டு சுத்தம் செய்ய ஆரம்பித்தாள். அரைப்பகுதி வேலை நடந்து கொண்டிருக்கும்போது "அம்மா!" என்ற குரலைக்கேட்டு, அதை அப்படியே போட்டுவிட்டுத் தெரு வாசலுக்கு வந்தாள். தயிர்க்காரியைச் சுட்டுவிடலாம் போல் தோன்றியது சரசாவிற்கு. ஆனால் பகல் உணவிற்குத் தயிர் இல்லாமல் முடிகிறதா என்ன? அதை வாங்கி வைத்துவிட்டு மீண்டும் வேலையைத் தொடங்கினாள் வீட்டுக்காரி. சமையல் வேலை முடிவடைவதற்குள் எத்தனையோ இடையூறுகள்! எனினும், குழந்தைகளும் கணவனும் வீடு திரும்புமுன் சமையலை எப்படியோ முடித்துவிட்டாள். உருளைக்கிழங்கு வற்றல் அடுப்பில் தயாராகிக்கொண்டிருந்தது. ஆகவே, குழந்தைகளுக்கு அதை அப்படியே சுடச் சுடக் கொடுக்கும்படி நேரிட்டது. சுந்தரத்தின் வாய் வேறு வெந்துவிட்டது. அலற ஆரம்பித்த அவனைச் சமாதானப்படுத்துவதற்குள் சரசாவிற்குப் போதும் போதுமென்றாகிவிட்டது!

இரண்டுமணி அடித்த சமயம் மறுபடியும் சரசா வீட்டில் தனித்திருந்தாள். அப்பாடா! ஒரு நாளைக்கு ஒரேமணி நேரம் மட்டும்தான் ஓய்வென்றால்...? களைப்புடன் பாயில் வந்து படுத்த அவளுக்குத் தையல் வேலைசெய்ய மனம் ஓடவில்லை. ரத்தினத்தின் சட்டை முடியாமலிருந்தது! விரைவில் அதைமுடிக்காவிட்டால் அவள் சண்டைக்கு வருவாள்.

களைப்பு மிகுதியால் கண்ணயர்ந்த சரசா கண்திறந்தபோது மணி மூன்று! "இனி மறுபடியும் டீ!" என்று முணகிக்கொண்டே படுக்கையில் புரண்டு படுத்தாள். "சரசா!"

"யார்?" சரசா நிமிர்ந்துட்கார்ந்தாள். பக்கத்துவீட்டுப் பார்வதி கதவின் பின்புறம் நின்றுகொண்டு உள்ளே எட்டிப் பார்த்தாள்.

"நான்தான் பார்வதி. உள்ளே வரலாமா?" என்று கேட்ட வண்ணம் அவளது பதிலையும் எதிர்பாராமல் உள்ளே நுழைந்தாள் பார்வதி.

"இப்பொழுதுதான் நேரம் கிடைத்தது. சற்று சாய்ந்தேன். வாயேன் உள்ளே; இப்படி உட்கார்" என்று வரவேற்ற சரசா, படுக்கையைச் சுற்றிவிட்டு ஆடையைச் சரிப்படுத்தினாள். "என்டி, தலைமயிரில் எண்ணெய் புரட்டிக்கக் கூடவா சமயமில்லை? காற்றிலே அசைந்து பிய்ந்து போகும் சோளச் செடியைப் போலிருக்கிறது உன்னைப் பார்க்க!" என்று கூறிய பார்வதி, தான் கூறிய எடுத்துக்காட்டில் பெருமை கொண்டவள்போல் லேசாகச் சிரித்தாள். சரசாவிற்குக்

கோபம் வரவில்லை. அவள்தான் சாதுவாச்சே!

"ஆமாம், நீ சொல்வாய்! உனக்கென்ன? வீட்டில் இரண்டு வேலையாட்கள். போதாததற்கு மாமியாரும் இருக்கிறார்கள். எனக்குக் கை ஓயப் பொழுது எங்கேடி கிடைக்கிறது?" என்று கூறிச்சரசா பெருமூச்செறிந்தாள்.

"மாமியாரைப் பற்றி என் கேட்க வேண்டும்?" என்று முணுமுணுத்துக்கொண்டே பார்வதி சமையற்கட்டை நோக்கினாள்.

"சரசா நீ ஒரு ஆச்சரியமான பெண்ணடி! ஒண்டியாக அத்தனை வேலையையும் செய்துகொண்டே வீட்டை எவ்வளவு அழகாக, தூய்மையாக வைத்திருக்கிறாய்! உனனுடைய சமையலும் மிக அற்புதம்!' என்றாள் பார்வதி. சரசாவின் முகம் சிவப்படைந்தது. "ஒரு வீட்டுக்காரியாகவும் தாயாகவுமிருப்பதில் நான் எவ்வளவு பெருமைப்படுகிறேன் தெரியுமா? நம்முடைய குழந்தைகளுக்கு நாமே எல்லாவற்றையும் செய்வதில்தானே இன்பம் இருக்கிறது? சில வேளைகளில் நமக்குச் சலிப்பு உண்டாவது என்னவோ உண்மைதான். எனினும் குழந்தைகளின் முகத்தைப் பார்த்தவுடன் அது எங்கோ மறைந்துவிடுகிறது—உண்மைதானே?" என்றாள் சரசா.

"முற்றிலும் உண்மை. நமது குழந்தைகளுக்கு நாம் வகைவகையான உணவுகள் சமைத்துக் கொடுப்பதும், அதனால் அவர்கள் ஆனந்த முறுவதும்—எண்டி, வாழ்க்கையென்றால் இவையனைத்தையும் அனுபவிப்பதுதானே!"

"காசைச் செலவழிக்க அஞ்சும் சில பெற்றோர் தங்கள் குழந்தைகளைப் பட்டினி போடுவதையும் பார்க்கிறோமே! வளரும் பிள்ளைகள் சிறுவயதில் சத்துள்ள உணவுகளை அவர்கள் உண்டால் பிற்காலத்தில் நல்ல பலமுள்ளவர்களாய் நிறை நாட்கள் வாழ்வார்கள். சில பெற்றோருக்கு இது தெரியாது! காசை மிச்சப்படுத்த எண்ணிச் சத்தில்லாத உணவுகளைக் கொடுத்துக் குழந்தைகளின் வாழ்நாளைக் குறைக்கிறார்கள். இவர்கள் காசை எதற்காக மிச்சப்படுத்துகிறார்களோ, தெரியவில்லை! நமது நாட்டில் எத்தனையோ பிள்ளைகள் சிறுவயதில் மாண்டுபோவதும் பிற்காலத்தில் நோயுடையவர்களாய் வாழ்வதும் இக்காரணத்தினால்தான் என்பது என் எண்ணம்"

[இப்பகுதி தொடர்ந்து வரும்]

பொன்னி

சந்தா விவரம்

	ஒரு ஆண்டு	ஆறுமாதம்
இந்தியா, இலங்கை	ரூ. 6-0-0	ரூ. 3-0-0
பர்மா, மலேயா, முதலிய வெளிநாடுகள்	ரூ. 6-12-0	ரூ. 3-6-0

சந்தாத் தொகை முன்பணமாகவே செலுத்தப்பட வேண்டும். இலங்கை நண்பர்கள் வி. பி. பி. மூலம் தபால் செலவுடன் தொகை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

போறுப்பாளர்.

நினைவிற்கு அப்பால்...

மு. கணேசன்

வட்டத்தாமரையைமுத்தமிட்டு மலரச் செய்த கதிரவன் மாலை நேரத்தில் தன்னைக் கண்டு அல்லி அகமகிழாததால்,கோபங் கொண்டு, முகம் சிவக்க, ஓடி மறைய... ஆரம்பித்தான். மேற்கிலிருந்து அவனை வர வேற்ற ஆகாயத்து அழகியின் முகமும் சிவந்தது! அந்தக் கொந்தளிப்பைக்கண்டு பறவைக் கூட்டம் கூச்சலிட்ட வண்ணம் கூட்டிற்குத் திரும்பியது. இயற்கையும், கருத்திலே கவலைகப்பி னதைக் காட்டும் அறிகுறியாகக் கருக்கிருளைப் போர்த்திக்கொண்டது.

புலி பதுங்குவது பாய்வதற்கு என்பதை மெய்ப்பிப்பதற்காகவோ என்னவோ நன்ருகப் பூப்பதற்காக இலை எல்லாம் இழந்துநின்றது, மல்லிகைச் செடி; பக்கத்திலே இருந்த வாய்க்காலோ வறண்டு கிடந்தது.

காற்றிலே கலந்துவந்த இந்தக் கீதம் காதிலே பாய்ந்து சென்று கருத்திலே தைத்தது. நான் நட்டமரமானேன். என் சிந்தனை வண்டி நினைவுத் தண்டவாளத்தின்மேல் ஓட ஆரம்பித்தது.

"காலமெல்லாம் அவன் காதலை எண்ணி
உருகுமோ, எந்தன் உள்ளம்"—

ஏழு ஆண்டுகளுக்குமுன், சென்னையில் இருந்தபொழுது ஒரு நாள் ..பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் அன்று கதா காலட்சேபம், வள்ளி திருமணம். வள்ளியைத் தேடி வேலன், வேடனுகவும், விருத்தனுகவும் சென்ருனே என்னவோ? நான்மட்டும் அங்கே போனது—அடுத்த வீட்டுச் சுந்தரவதனுவைப் பார்க்கத்தான்!

'காமிராவில்' காத்துக்கிடக்கும் 'பிலிம்' சுருளில் தட்டுப்படும் பொருள் படிந்து விடுவது போல, என் இளம் உள்ளத்தில் சுந்தரவதனு குடியேறினுள். 'போட்டோ' பிடிப்பதற்குமுன் விசையைத் தட்டிவிடுவதுபோல என் உள்ளத்தில் அன்பு-வெள்ளியை முளைக்கச் செய்தது அன்று நடந்த வள்ளி திருமணம்தான்!

அன்புரோஜா மலர்ந்து மணம் வீசச் சந்திப்பு நீர்தானேதேவை! ஆயர்வீட்டில் தோய்ந்த தயிருக்குப் பஞ்சமா என்ன? பக்கத்துப் பக்கத்து வீட்டில் இருந்ததால் பார்வைக் கடிதங்களைப் பரிமாறிக் கொண்டோம். காற்றை ஊத ஊதப் பெரிதாகிக்கொண்டே வரும் ரப்பர் பலூன்போல, சந்திப்புக்குச் சந்திப்பு அன்பு வளர்ந்து வந்தது!

ஒருநாள் நான் தோட்டத்தில் மல்லிகை அரும்புகளைப் பறித்துக் கொண்டிருக்கும்போது, "பார்வதி" என்று என் தங்கை

யைக் கூப்பிட்டுக்கொண்டே, குதித்தோடி வந்தாள் சுந்தரவதனு. தனிமையில் என்னைக் கண்டதும் கலக்கமடைந்தாற் போல நின்ருள்.

குறும்புப் பார்வையோடு நான் வைத்திருந்த அரும்பை அவளிடம் கொடுத்தேன். அப்பொழுது இரு கரங்களும் இணைந்தன! இரு கரங்கள் மட்டுமா, எங்கள் இதயங்களும் இரண்டறக்கலந்தன!! ஒருவரை ஒருவர் விழிகளினுலேயே பருகி விடுவதைப் போலப் பார்த்து நின்ருேம்! இணைந்தகரத்தை எடுக்காமலேயே முதலில் நான் பேச ஆரம்பித்தேன்.

"உன்மேல் உள்ள ஆசை வெள்ளத்தில் அமிழ்ந்து கிடக்கிறேன் நான்!"

"ஐயோ! ஆற்றில் ஆழ அமிழ்ந்துவிட்டால் என்கதி?"—கேள்வியிலும் — ஏன் அவள் கடைக்கண் பார்வையிலும் கேலி நிறைந்திருந்தது!

"பயப்படாதே! அதுவே எனக்கு உயிர் ஊட்டும் மருந்தாகும்"—நான் பின்வாங்குவதாயில்லை!

"நோயை யாராவது தேடி அழைத்துப்பின் அது தீர மருந்துண்பார்களா?"—என் மௌனத்தை வெற்றியாகக் கொண்டு புன்னகை பூத்தாள்!

"அம்மைக்கிருமிகளை உடலில் செலுத்திக்கொண்டு அதனல் வரும் காய்ச்சலை மாய்க்கவேண்டிக் கசப்பான மருந்தையும் கண்ணை மூடிக்கொண்டு குடிப்பதில்லையா? மேலும் அன்பை நோய் என்றுயார் சொன்னது?"

நான் சமாளிக்க முயன்றேன்! கையில் உள்ள அரும்பு மலரத் தொடங்கிற்று!

"உங்கள் பேச்சு எனக்குப் புரியவில்லையே!"—

வாதத்திலிருந்து அவள் தப்ப முயன்ருன்!

"அன்பு ஒரு புரியாப் புதிர் தானே! புரியாவிட்டால் போகிறது. எட்டாப்பழம் கிட்டியிருக்கும்போதுவெட்டிப்பேச்சு ஏன்? பிறந்து வளர்ந்த வீட்டையே துறந்து செல்ல நேரிட்டாலும் ஒத்த இதயத்துடன் கூடிய நாம் ஒன்ருக வாழ்வோம்" என்று நான் சொல்லி முடிப்பதற்குள் யாரோ கனைத்த சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன்—திடுக்கிட்டுச் சிலையானேன்!

என்னெதிரே நின்றுகொண்டிருந்தார்—கோபமே உருவான என் அப்பா! எதற்காகவோ அங்கு வந்தவர் மறைந்து நின்று எங்கள் உரையாடலைக் கேட்டிருக்கிருர். என் இதயத்தையே தந்தி இயந்திரம் ஆக்கி யாரோ அவசரம் அவசரமாக அடித்தார்கள்! நமக்குப் பிரியமானவர்களின் சாவுச் செய்தியைத் தந்தி மூலம் அறிந்த உடன் அடையும் துயர நிலையில் நான் இருந்தேன். எரிமலை வெடிக்க ஆரம்பித்தது—என் தந்தை கோபத்தைக் கொட்டலானுர்! என்னென்னவோ சொன்னுர். என் நினைவில் நிலைத்து நின்றவை இவைதாம்:—

"நல்லா வாழ்வே, நானும் அதைப் பார்த்துக்கிட்டுத் தான்

இருப்பேன்;ஏன்டா!பதினெட்டு வயசுப் பய நீ! நம்ம பழக்கங்களை மறந்து, ஜாதி ஆச்சாரத்தை எல்லாம் துறந்துட்டு, எவளையையோ பிடிச்சுக்கிட்டுப் போகலா மின்னுப் பாக்கிறே? ஊம். என்ன தைரியமடா உனக்கு? அவ்வளவிற்கும் நான் கொடுத்த இடம்தான்டா காரணம். தங்கம் அப்பவே தலை தலேன்னு அடிச்சுக்கிட்டா — பையனைக் கொஞ்சம் கண்டிச்சு வையுங்க—சதா பக்கத்துவீடே கதின்னு கிடக்கிறான்னு. நான் அப்படி ஒன்றும் தப்புத் தண்டாக் காரியத்துக்குப்போக மாட்டான் நம்ப தம்பின்னு ஆறுதல் சொன்னேன். என் நம்பிக்கையை நாசமாக்கி விட்டாயேடா!" நாகம்போலச்சீறினார்! என்எதிர்கால இன்ப நம்பிக்கையை என் தந்தை நாசமாக்கிக்கொண்டிருந்தாரே, அதற்கு அவரை என்ன செய்வது?

நீர்த்திரையிட்ட கண்களுடன் நிமிர்ந்து நோக்கினேன்; என் சுந்தரவதனை அங்கில்லை—அந்த இடத்தைவிட்டு மட்டுமா, என் வாழ்விலிருந்தும் மறைய ஆரம்பித்துவிட்டாள்!

இன்ப நதியின் இரு கரைகளாக இருந்த எங்கள் இருவர் இதயத்தையும், என் தந்தை ஜாதியென்னும் மண்வெட்டியால் உடைத்துக் கொண்டிருந்தார். களிப்புக் கடலை நாடி ஓடிக் கொண்டிருந்த அன்பு வெள்ளம் வடிய ஆரம்பித்தது!

அதன் விளைவு—வேறென்ன? இந்தக் காலத்து இளைஞர்களிடையே பிறக்கும் அன்பு காற்றுல் நிரம்பிய ரப்பர் பலூன்! அளவுக்கு மீறிய ஆசையால் ஊதிய பலூனை மார்பில் வைத்து அழுத்தும்போது—தூள் தூளாகச் சிதருமல் என்ன செய்யும்?

மார்பில் வைத்து அழுத்துவதால் தானே தூள் தூளாகச் சிதறுகிறது? அப்படி அழுத்தாமலேயே இருந்துவிட்டால்... தூள் தூளாகிவிட்டதே என்ற "அழுகைக்கு அப்பால்"சென்றுவிடலாம் அல்லவா?


அது எப்படி முடியும்? காற்று நிரம்பிய ரப்பர் பலூன் உடைவதற்கு அதன் கவர்ச்சியே ஒரு காரணமாகலாம் அல்லவா?

போட்டிக்கு ஒரு பையன் வந்துவிட்டால் 'மாட்டேன்' என்று சொல்லி மார்போடணைக்கும் போதும் உடையலாம் அல்லவா?

அதுவும் இல்லாவிட்டால், பையன் பலூனை வைத்து விளையாடிக்கொண்டே படிப்பில் கவனமில்லாமல் பாழ்ய் விடுவானோ என்று பயந்து தந்தை, "டேய்" என்று அதட்டிக் கூப்பிட்டு, கூட்டல் கழித்தல் போடும்படி உத்திரவிட்டுப் பின், கையிலிருக்கும் காற்று நிரம்பிய பலூனைப் பிடுங்கும்பொழுதுகூட உடையலாம்!

சுந்தரவதனை அடுத்த ஆண்டே என் பள்ளித் தோழன் ஒருவனுக்கு மணஞ்செய்து வைக்கப்பட்டாள். என் தந்தை திடீரென்று இறந்துவிட்டதால் நாங்கள் சொந்தக்கிராமத்திற்குவந்துவிட்டோம்......

"காலமெல்லாம் அவன் காதலை எண்ணி உருகுமோ எந்தன் உள்ளம்"- கடைசித் தடவையாகக் காதில் விழுந்த பாட்டின் அடி என் சிந்தனை வண்டிக்குப் 'பிரேக்' போட்டது.



"ஒரு வேளை அவளும் இப்படித்தான் உருகித் தவித்துக் கொண்டிருப்பாளோ?"—என் சந்தேக மனம் மகிழவேண்டி இப்படிக்கேட்டது!

"காலம் ஆற்ருத புண்ணே இல்லை!"—என் அனுபவ மனம் இப்படிப் பதிலளித்தது!

நண்பர் ஒருவரின் திருமண அழைப்பைக் காரணமாகக் கொண்டு; சுந்தரவதனவைக் காணச் சென்னைக்குப் புறப்பட்டேன். சுந்தரவதனவின் கணவன்—என் பழைய நண்பன்—என்னை நன்கு வரவேற்ருன். நீண்டநாளைக்குப்பின் கண்டதால் நெடுநேரம் அளவளாவிப் பின் அலுவலகம் சென்ருன்.

என்னைக் கண்டதும் சுந்தரவதனவின் கண்கள் அகன்று விரிந்தன! அவள் புருவ வில் வளைந்து மேலே எழும்பியது! அதிலிருந்து கிளம்பியது, ஆளைக் கொல்லும் அம்பா அல்லது மயக்கமூட்டும் மலர்க் கணையா, எது என்று சொல்ல முடியவில்லை! பார்வை, பேச்சு, நடவடிக்கை—இதில் படிந்த அவள் எண்ணத்தின் சாயல் எதுவென்று கண்டுகொள்ள முடியவில்லை. இருளில் உருவம் தெளிவாகத் தெரியாவிட்டாலும், ஏதோ ஒன்று இருப்பதை உணர்கிரேம் அல்லவா? அதுபோல அவள் உள்ளத்திலும் ஏதோ ஒன்று இருப்பதாக மட்டுமே தெரிந்தது! இப்படியே நான்கு நாட்கள் கடந்தன.

ஐந்தாம் நாள் மாலையில்...... அவன் குழந்தை புஷ்பா, பொம்மைக் கல்யாணம் செய்து மணமகளையும் மணமகனையும் பூனைமேல் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டுவர முயற்சி செய்து கொண்டிருந்தது. அப்பொழுது அதைப் பார்த்துக்கொண்டே நின்றுகொண்டிருந்தாள், சுந்தரவதன. அவள் கொடுத்த காப்

பியை வாங்கி நான் பருகிக் கொண்டிருந்தேன்.

"இதைப்போலத்தான் நாமும் அப்போது விளையாட்டில் ஈடுபட்டிருந்தோம் அல்லவா?"

சுடச்சுடக் குடித்த 'காப்பி' நாவைமட்டும் சுட்டது; ஆனல் அவள் பேச்சோ, என் நெஞ்சையே சுட்டுவிட்டது!

விளையாட்டு....விளையாட்டா? ...காதல், காதல் என்று எதை நான் சொல்லி என் வாழ்வையே பாழ்படுத்திக் கொண்டிருந்தேனே, அதையே அவள் 'விளையாட்டு' என்று கூசாதுகூறினள்!

"விளையாட்டு அர்த்தமற்றதாக இருக்கலாம்; ஆனல், ஆனந்தம் இருக்கிறதா, இல்லையா?"...என்றேன்.

"ஆனந்தம் அறிவோடு கூடியதாகவும் இருக்கவேண்டும்"—என்று சொன்னள்.

மனிதன் எதை வேண்டுமானலும் பொறுக்கலாம்; அறிவுக்கும் அவனுக்கும் தொடர்பில்லை என்று சொன்னல்?...

அன்றிரவே நண்பன் தடுத்தும் கேளாமல் அவசர வேலையிருப்பதாகக் கூறி நான் புறப்பட்டதைக் கண்டு என்னென்னவோ எண்ணியிருப்பான் ......அவன் மட்டுமா?......நான் கூடத்தான் என்னென்னவோ எண்ணலானேன். ரப்பர் பலூனின் உடைந்த துண்டுகளைக் கொண்டு சிறு சிறு முட்டைபோன்ற உருவங்களைச் செய்து மகிழலாம் என்று அங்கு சென்ருல், அவள் அவற்றைக்கூடத் தூக்கித் தூர எறிந்துவிட்டிருக்கிருள். எதுவும் பார்வையினின்றும் மறைந்தால் நினைவினின்றும் மறைந்துவிடும் என்று சொல்கிருர்களே, அது உண்மைதானே?

கருத்தை மூடி மறைத்திருந்த கவலை இருளைப் போக்கக் கண்களுக்கு வேலை கொடுக்க ஆரம்பித்தேன். பாரசீகக் கவிஞர் "உமார் கய்யாம்" எழுதிய கவிதைத் தொகுப்பைக் கைகள் தாங்கிக்கொண்டிருந்தன: பக்கங்கள் புரண்டன; ஓரிடத்தில் கண்கள் நிலைத்து நின்றன; நானும் நீங்காதநினைவில் ஆழ்ந்துவிட்டேன். கருத்தைக் கவர்ந்த அந்தக் கவிதை இதுதான்:—

"உங்களுக்குத் தெரியுமா, நண்பர்களே, எவ்வளவு காலமாக என்னுடைய வீட்டில் புதிதாகச் செய்துகொண்ட திருமணத்திற்காக, நான் குடித்துக் களித்திருப்பது? நான் பயனில்லாத பழைய அறிவை விலக்கிவிட்டு, மதுவின் மகளை மனைவியாகஏற்றுக்கொண்டேன்."


அறிவு ஓரளவு அமைதியைக் கொன்றுவிடுகிறது என்பது தான் இந்தக் கவிதையின் உட்கருத்தோ? நினைவிற்கு அப்பால் சென்ருல்தான் நிம்மதி காண முடியும் என்று இவர்கூறுகிருரா?—இதுபோன்ற பலவித சந்தேகங்களை எழுப்பி என் மனம் சங்கடப்பட்டது. சிக்கலைத் தீர்க்க முடியாததால் தானே என்னவோ மனம் தூக்கத்தைச் சரணடைந்தது.

மறுநாள் காலையில் என்னுடைய வீட்டில் கண்ணாடியைத் துடைத்துவைத்துக்கொண்டிருந்தபோது என் தாயார் என்னிடம் பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

"கருவேலிக்காரர் பெண்ணு—மூக்கும் முழியுமா இருக்கும்! தவங்கிடந்தாங்க கட்டிக்கச் சொல்லி; சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழிச்சுட்டே. போனவருஷம் பொன்னுசாமி ஆள்மேல் ஆள் விட்டனுப்பினாரு—தன் மகளைக் கட்டிக்கச் சொல்லி; நாலாயிரத்துக்குச் சீர் செய்யறதோட நாற்பது பவுனுக்கு நகை வேறே போட்றேன்னு சொன்னாரு. உம் பிடிவாதத்துக்குத்தக்கபடி பெண்ணு கொஞ்சம் கருப்பா இருந்திடுச்சு. அதான் சாக்குன்னு அதையும் தட்டிக் கழிச்சுட்டே. இப்பப் பணமும் அழகும் சேர்ந்து வந்திருக்கு; பொண்ணு போட்டோ கூட அனுப்பிச்சிருக்காங்க; என்னடா சொல்றே? வீட்டிலே குடியேறவரும் லட்சுமியை விரட்டியடிக்காதேடா—என்ன சொல்றே? என்ன சொல்லி அனுப்பறது? சொல்லு!"......

எப்படியோ நழுவிக் கையிலிருந்த கண்ணாடி கீழேவிழுந்து உடைந்து சிதறியது. அப்பொழுது பக்கத்தூருக்குப் போயிருந்த என் மாமா வந்தார். வீட்டுக்குள் நுழையும்போதே பேசிக்கொண்டு வருவது அவர் வழக்கம். அதுபோலவே அன்றும் பேசிக்கொண்டே வந்தார்.

"தங்கம்! ஏலத்திலே இந்தக் கண்ணாடி வாங்கியாந்தேன். ஒண்ணுக்கு ரெண்டா இருந்துட்டுப் போகட்டுமின்னு. அடடா! இதென்ன? பழைய கண்ணாடி உடைஞ்சி போச்சா? நான் வாங்கியாந்ததும் ஒருவிதத்தில் நல்லதாப்போச்சு"—என்றார்.



"ஏண்டா ராமு, சின்னப் பெண்களுக்குக் கல்யாணம் செய்வதில்லை?"

"அவர்களுக்குச் சமைக்கத் தெரியாதுடா அதனால்தான்"

நான் புதிய பாடம்பெற்றேன். கண்ணாடித் துண்டுகள் 'உமார் கய்யாம்'கவிதையைத்தான் பிரதிபலித்துக் கொண்டிருந்தன! உடைந்த கண்ணாடியின் இடத்தில் வேறொன்று...... இதயத்தில் அமர்ந்தவர் அகலும்போது ஏன் இன்னொருவருக்கு இடமளிக்கக் கூடாது?

"உன் விருப்பப்படியேசெய்துவிடம்மா!" என்று என்வாயிலிருந்து வெளிவந்த அந்தச் சொற்களுக்குத்தான் என்ன மாயம் இருந்ததோ தெரியவில்லை. அம்மா சிலையானார்கள்!

இதயத் துடிப்பு

"ஒவ்வொரு நாளும் அவர் வருகிறார், உடனே போய்விடுகிறார். உரையாடல் எதும் எங்களுக்குள் நிகழ்வதில்லை. இருப்பினும், உள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் உணர்ச்சிகளை எழுப்பி விட்டு உடனே அகன்றுவிடுகிறார். அவர் உடல் பார்வையினின்று மறைந்துவிடுகிறது. ஆனால், அவரின் அழகிய உருவமோ!—தூங்கும்போது கனவிலும், விழித்திருக்கும்போது நினைவிலும் என்னை விட்டு அகல மாட்டேன் என்கிறதே!

"தோழி இந்தா, என்னுடைய கூந்தலிலுள்ள மலரைக் கொண்டு போய் அவரிடம் கொடு. அவர், 'யார் தந்தது?' என்று கேட்டால், சயவு செய்து என் பெயரை மட்டும் சொல்லாதே. ஏனெனில் தினமும் வருகிறாரே ஒழிய, ஒன்றுமே பேசுவதில்லை. சீக்கிரம் சென்றுவிடுகிறார்.

"தோழி, அதோ தெரிகிறதே மரம், அதனடியில்தான் எப்போதும் நிழலுக்காக மண்ணிலும், தூசியிலும் உட்காருகிறார். அவர் அமரும் இடத்தில் அழகிய ஆசனம் ஒன்று அமைப்பாயா? எனக்காக, நீ போய் அவ்விடத்தைச் சுத்தம் செய்து, மலரையும் தளிரையும் தூவிவிட்டு வருவாயா?

"அவருடைய வாட்டமுற்ற கண்கள், என் இதயத்தைப் பெரிதும் வாட்டுகின்றன. மனதிலுள்ளதை மறைத்து வைத்திருந்தால், யாருக்கடி தெரியும்? மணவிலேயே இருந்துவிட்டுப் போனால் மட்டும் போதுமா?—வாய்விட்டு வெளியே சொன்னால் தானேடி, தெரியும்! பாவம், வெளியிட வெட்கப்படுகிறார். தினமும் வருகிறவர், பேசாமலேயே போய்விடுகிறாரடி!

—கரு. இராமநாதன்.

[தாகூர் கவிதையின் மொழிபெயர்ப்பு]

தமிழ் கற்கும் வையம்

மாங்குயில் கூவி, இவ்
வண்ணத் தமிழ் மொழி
விற்கும்—இந்த
வையமெலாம் அதைக்
கற்கும்—களி
தாங்காது தோகை
விரித்தாடி மாமயில் நிற்கும்

—பாரதிதாசன்

ஒரே இரத்தம்....!

சுலோசனு

"ஜமீந்தார்! ஆச்சரியமாயிருக்கிறதே! வலேயர் தெருச் 'சாயாக் கடை'ப் பக்கமாகச் சற்று முன்பு உங்களைப் பார்த்தேனே...! அதற்குள்ளேயும்......"

"ஸ்டார்" ஐரோப்பிய ஹோட்டலின் ஓர் அறையில் சோபாவில் சாய்ந்து கிடந்த புவலூர் ஜமீந்தார் தியாகேசன் திடுக்கிட்டு நிமிர்ந்தான். கதவைத் திறந்து கொண்டு வந்தவன் அவனது 'பிரைவேட்' காரியதரிசி உமாநாதன். அவனுடைய பேச்சினல் ஆத்திரமடைந்த தியாகேசனுக்கு அவனது வாயில் அப்படியே அ்ைைறந்து விட வேண்டும் போலிருந்தது.

"என்னடா உளறுகிறுய்? என்னை நீ வலேயர் தெருச் சாயாக் கடையில் பார்த்தாயா? என்ன விந்தை! நானவது அந்த வலேயர் தெருவுக்குப் போவதாவது! உன் மண்டையிலுள்ள மூளை களிமண்ணுக மாறிவிட்டது போலிருக்கிறது! 'நான்சென்ஸ்'!" என்ருன்.

உமாநாதனின் முகம் பார்ப்பதற்கு என்னவோ போலிருந்தது.

"பொய் சொல்லவில்லை, எஜமான். நேற்றுக்கூடச் சாயங்காலம் நான் அந்தத் தெருவில் போகும் போது அந்தக் கடை முன்னே நீங்கள்—இல்லை, உங்களைப் போல் ஒருத்தர்—நிற்பதை என் கண்ணுலே பார்த்தேன்! எனக்கு ஒரே அதிசயமாயிருந்தது! நம் ஜமீந்தார் இங்கே ஏன் வரப் போகிறுரென்று பேசாமல் வந்து விட்டேன்! உங்களிடம் சொல்லவில்லை. என் மனம் ரொம்பவும் சங்கடப்பட்டது. இன்றும் அவனைப் பார்த்தேன்—நிஜமாக அது தாங்களில்லையா, எஜமான்?"

எஜமான் எழுந்து பரபரப்போடு அங்குமிங்கும் ஆத்திரமாக நடந்தான். என்ன விந்தை! புவலூரின் இளஜமீந்தார் தியாகேசன்; அவனது தந்தை காலமாகி இன்ருேடு வருடம் ஒன்ருகிறது. தியாகேசன் உல்லாசப் பிரியன்—மேல்நாடு சென்று திரும்பியவன். தனது 'ஆருயிர்' போன்ற 'பிரைவேட்' காரியதரிசியோடு சிலகாலம் பட்டணத்தில் 'முகாம்' போட்டு ஐரோப்பிய ஹோட்டலின் 'உல்லாசங்களை' அனுபவிக்க வந்துள்ளான். உலக இன்பங்கள் — சுகபோகங்களுக்காகப் பணத்தைத் தண்ணீராக வாரியிறைக்கிறுன்...

'கௌரவமும் புகழும்' வாய்ந்த 'இளமைனர்' அவன்! அப்பேர்ப்பட்டவன் அந்தப் பட்டணத்திலேயே அநாகரிகமான 'கீழ்ச்சாதி' வலேயர் வசிக்கும் தெருவில் சாயாக்கடை முன்பு காணப்பட்டானென்று தனது சொந்த 'மூளையில்லாத' 'பிரைவேட் செக்ரட்டரி'யின் வாயாலேயே கேள்விப்படுவதென்

னால்...? அதனுடைய 'அர்த்தம்' தான் என்ன? அதைவிட இழிவு - கேவலம் - வேறென்ன விருக்கிறது?

"உமா! பத்திரம்! உளராதே! என்னை நீ..."

"என் கண்கள் குருடல்லவே எஜமான் 'உங்களை'ப் போன்றே ஒருவரை என் கண்ணால் பார்த்தும் பொய் சொல்வானேன்...?"

"முட்டாள் கழுதை. எப்போதடா கண்டாய்......? சற்று முன்பா...?"

"ஆமாம்: மூன்று மணிக்குப் போல்..."

"நான் மத்தியானத்திற்கு மேலே வெளியே எங்கும் செல்லவில்லையே!"

"அப்படியானால்...?"

"வேறு யாரையாவது பார்த்துவிட்டு நானாக்கும் என்று எண்ணிவிட்டாய்! ஆள் மாறாட்டமடா, ஆள் மாறாட்டம்!"

உமாநாதன் நெற்றியில் கையை வைத்து அழுத்திக் கொண்டே சிந்தனையில் ஆழ்ந்தான்.

ஜமீந்தாருடைய நடையின் வேகம் பின்னும் அதிகரித்தது... ஏனோ அவனது அழகிய முகம் வெளிறியது; கரிய நீண்ட கண்களில் கலக்கம் குடிகொண்டது. இதழ்களினோரத்தில் ஒருவித எக்காளமான நகை நர்த்தனமாடிக்கொண்டிருந்தது. உள்ளத்திலும் அலை மோதியது. விந்தையிலும் விந்தை! அன்று மத்தியானத்திற்குப் பிறகு "ஸ்டார்" ஹோட்டலை விட்டு அவன் நகரவில்லை —உமாநாதன் என்னடாவென்றால் அவனை வலையர் தெருச் சாயாக்கடை முன்னே கண்டதாகச் சத்தியம் செய்கிறான்! ஒரு ஜமீந்தாரின் பிள்ளை...மேல் நாட்டுப் பட்டதாரி!... இதில் ஏதோ சூது இருப்பதாக எண்ணினான்!

தியாகேசனின் நடை சட்டென நின்றது. 'செக்ரட்டரி'யை எரித்து விடுவதுபோல் நோக்கிக் கொண்டே, "உமா! நாளை நானும் உன்னோடு வருகிறேன்! இதன் ரகசியத்தை அவசியம் கண்டு பிடித்தாக வேண்டும்! என்னைப் போல் எவனோ 'வேஷ'மணிந்து கொண்டு 'மாறாட்டம்' செய்கிறான் என்று தெரிகிறது!" என்றான்.

"நீங்களுமா வருகிறீர்கள்...? உங்கள் கௌர..."

"சீ, வாயை மூடு! நான் ஒன்றும் ஏமாந்தவனல்ல!"

தியாகேசனின் கண்டிப்பான குரல் உமாநாதனின் வாயை அடக்கியது...அவன் சென்றதும் கதவை மூடிவிட்டு ஜன்னலின் சமீபம் வந்து நின்றான் தியாகேசன்...அவன் சிந்தனை சுழன்றது...

முற்றிலும் தான் உலகானுபவம் பெறுமுன் தன் தந்தை போய் விட்டாரே என்பதை எண்ணி வருந்தினான். ஜமீந்தார்கள், பெரிய பெரிய தனவான்கள் முதலியவர்களின் வாழ்க்கையில் நிகழும் 'கோர' நிகழ்ச்சிகள் இன்று அவன் முன்னே படக் காட்சிபோல் தோன்றின.

தன் வாழ்க்கையிலும் அம்மாதிரி நிகழ்ச்சி நிகழ்ந்துவிட்டால் தன்னால் அதை எதிர்க்க முடியுமா?

அடுத்த பக்கம்

இன்று உமாநாதனின் மூலம் அறிந்த செய்தி ஏனோ அவனைக் கலங்க வைத்துவிட்டது.

* * *

மறுநாள் மாலை மணி நான்கு இருக்கும். புவலூர் ஜமீந்தார் ஒரு சாதாரண உடை அணிந்து கொண்டு உமாநாதன் 'சகித மாக, வலையர் தெருவில் 'பவனி' வந்தான்! வலையர் தெரு நீண்ட குறுகிய சந்து. இருபக்கமும் நெருக்கடியான ஏழ்மைக் குடிசைகள்! தெருவில் ஒரே முடை நாற்றம்! எங்கும் குப்பை கூளங்கள்! தியாகேசனின் முகம் வெறுப்பால் கறுத்தது. இத்தகைய அசுத்தமான தெருவில் தன் 'பாதம்தொட்டு' நடந்து போகும்படியான 'கர்மம்' தன் தலையில் விழுந்து விட்டதே யென்று பொருமினன்...ஆனால் அவன் உள்ளத்தின் ஓர் மூலையிலிருந்து ஒரு குரல் அவனை மேலே மேலே செல்லும்படி உற்சாகப்படுத்திக் கொண்டேயிருந்தது...

உமாநாதன் குறிப்பிட்ட தேநீர்க் கடை மிகவும் சிறியது. தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த ஒன்றிரண்டு இளைஞர்கள் வாயில் சுருட்டுடன் அருகில் உரையாடிக் கொண்டிருந்தனர். உள்ளே நுழையலாமா, வேண்டாமா என்ற சந்தேகம் கொண்டவன் போல் தயங்கித் தயங்கி உமாநாதனுக்குப் பிறகு தியாகேசன் உள்ளே நுழைந்த சமயமும், உள்ளேயிருந்து 'சடக்'கென்று ஒரு இளைஞன் வெளியே 'பாய்ந்த' சமயமும் ஒன்றாக விருந்தன! அந்த இளைஞன் தியாகேசனோடு பலமாக மோதிக் கொண்டான். மோதிய வேகத்தில் தியாகேசன் கீழே புழுதியில் விழுந்து விட்டான்!

"மன்னித்துக் கொள்ளுங்கள், ஸார்! கவனிக்கவில்லை!" என்று சாந்தமான குரலில் கூறிய அந்த இளைஞன், தியாகேசனைத் தூக்கி விட்டான்.

உடையில் படிந்திருந்த தூசைத் தட்டிவிட்டு நிமிர்ந்த தியாகேசனின் கண்கள், எதிரே நின்ற இளைஞனின் கண்களைச் சந்தித்தன... என்ன வியப்பு! அந்தக் கண்கள் மறுபுறம் அகல மறுத்து விட்டன! எதிரில் தான் பார்க்கும் முகம் தன்னுடைய முகமே தானா, அல்லது தன்னுடைய மறுபதிப்பா? அந்த முகம் தியாகேசனின் மனதை அப்படியே ஒரு புரட்டுப் புரட்டிவிட்டது. நெஞ்சம் துரிதமாக வேலை செய்தது... கட்டுக்கோப்பான உடம்பைக் கொண்டிருந்த அந்த இளைஞன் தியாகேசனையே வார்த்து வைத்தாற்போலிருந்தான்!

"என்ன...என்ன..." என்று குளறினன் தியாகேசன். அதற்கு மேல் பேச முடியாதென்று அவன் நாக்கு 'சத்தியாக்ரகம்' செய்ய ஆரம்பித்துவிட்டது! ஆனால் அந்த இளைஞனின் கண்களிலோ குறும்பு மின்னிட்டது.

"ஆ!என் சகோதரன்...என்..." என்று ஏதோ கூறவந்த அவன் சட்டென்று நிறுத்திவிட்டுப் பார்வையை விலக்கிக் கொண்டான். பிறகு, "எனக்கு முகம்

பார்க்கும் கண்ணுடி இல்லை ஸார்! இன்றுதான் என் முகத்தை நான் கண்ணுடியில் பார்க்கச் சந்தர்ப்பம்கிடைத்தது! தாங்ஸ்!" என்று கூறிவிட்டு ஒரு விஷமச் சிரிப்புடன் அவ்விடம் விட்டகன்ருன்!

ஜமீந்தாரும் 'மந்திரி'யும் திக்பிரமை பிடித்தவர்கள் போல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு அசையாத பதுமைகளாய் விட்டனர்...பிறகு, அங்கு நின்றவர்கள் தங்களையே வேடிக்கை பார்க்கின்றனர் என்பதை உணர்ந்த உமாநாதன், கனவு லோகத்தினின்று சட்டென்று திரும்பினுன்.

"ஜமீந்தார்! நான் எண்ணியது பிசகுதான்...! இதே ஆள்... இவனைத்தான் நேற்று இங்கே பார்த்தேன்... பார்த்தீர்களா? நீங்களாக்குமென்று நான் எண்ணிவிட்டதில் ஆச்சரியமென்ன?" என்ருன்.

"எனக்கும் ஒரே ஆச்சரியமாகத்தானிருக்கிறது உமா! அவன் யாராக இருக்கலாம்? திமிரைப் பாரேன்! என்னைச் 'சகோதரன்' என்று அழைத்ததுமல்லாமல் கேலியாகவும் சிரித்துவிட்டுப் போகிருனே பிச்சைக்காரப் பயல்!"

"திருட்டுப் பயலாகவிருப்பான் ஜமீன்தார்..."


"ஆமாம்; ஆள் மாருட்டம் செய்யும் திருடன்!"

"எங்கே போகிருனென்று பார்ப்போமே!"

தியாகேசனின் கண்கள் அந்த இளைஞன் சென்ற திக்கை வெறித்து நோக்கின. அவனைப் பின்தொடர்ந்து, அவன் யாரென்பதை அறியவேண்டுமென்ற ஒருவித ஆவல் அவன் உள்ளத்தைத் துடிக்க வைத்தது. ஆனுல் ஓர் புறம் தயக்கம்—அச்சம். எனினும் ஆசையே முடிவில் வெற்றியடைந்தது. இருவரும் அவன் சென்ற திக்கை நோக்கி நடக்கலாயினர். அவன் சுமார் பதினைந்து வீடுகளுக்கப்பால் சென்றுவிட்டான். ஆகவே அவர்கள் தங்கள் நடையைத் துரிதப்படுத்தவேண்டியதாயிற்று. இவர்கள் தன்னைத் தொடர்வதை அவன் அறிந்து கொண்டானே என்னவோ? ஆனுல் பின் திரும்பி நோக்காமல் விறுவிறுவென்று நடந்தான். தெருவின் கோடியை யடைந்ததும் சற்று நின்ருன்—பிறகு சட்டென்று ஒரு சிறு வீட்டிற்குள் நுழைந்துவிட்டான்!

அவன் அவ்விதம் சட்டென்று 'மறைந்து'விடுவானென்று தியாகேசன் எதிர்பார்க்கவேயில்லை. இதழ்களில் லேசாகப் புன்னகை மலர உமாநாதனை நோக்கினுன்; பிறகு அந்தச் சிறு வீட்டை நோக்கினுன். வீட்டு எண்ணை மனதிற்குள் நன்ருகப் பதிய வைத்துக்கொண்டான்... அவ்வீட்டைக் கடந்துபோகும்போது மறுபடியும் அங்கே பார்க்கவேண்டுமென்ற ஆசை தியாகேசன் மனதைத் தூண்டவே, திரும்பி நோக்கினுன். ஆ! அங்கே ஜன்னல் வழியாக அவன் கண்ட காட்சி!

ஜன்னல் வழியே "முழு நிலவு"தானே என்று பதட்ட



மடையும் வண்ணம் ஒரு இளம் பெண்ணின் அழகிய முகம் தென்பட்டது. நிலவைச் சூழ்ந்து நிற்கும் கருமேகங்கள் போல் அவளது கரிய கூந்தல் பிரிந்து கிடந்தது. பாதி திறந்திருந்த சிவந்த இதழ்களினூடே முத்துப் போன்ற பல் வரிசை! மிரண்டு சுழன்று நோக்கும் இரு கரிய விழிகள்...அந்த இரு கரிய விழிகளும் அவனை—அவன் இதயத்தையே துளைத்துவிடுவது போல்—ஊடுருவிப் பார்த்தன!

ஏனோ தியாகேசனின் உடல் அப்படியே வியர்த்துவிட்டது! நெஞ்சம் 'படக் படக்'கென்று அடித்துக்கொண்டது! கால்கள் குழைவுண்டு துணியாக மாறி மேலே நடக்க மறுத்துவிட்டன! வெறிக்க நோக்கினன் அந்தப் பெண்ணே; ஒரு விநாடி தான்—அந்த 'மின்னல் கொடி' மறைந்துவிட்டாள்!

* * *

அன்று நடந்த நிகழ்ச்சி, புவலூர் ஜமீன்தாரின் அமைதியான இளம் வாழ்க்கையில் ஓர் பெரும் புயலைக் கிளப்பிவிட்டது. விடாமல் மோதியடிக்கும் நெஞ்சலைகளின்மீது எண்ணப் படகுகள் விரைந்து சென்று தடுமாறிக் கவிழ்ந்தன. ஏதோ ஒரு சம்பவம்—ஒரு பெரும் விபத்து—தனக்கு நேரிடப்போவதாக அவன் மனச்சாட்சி அறைகூவிற்று. "அந்த இளைஞன் யார்? அங்கே கண்ட அழகிய பெண் யார்?"

இவ்விரண்டு கேள்விகளையும் தனக்குத் தானே கேட்டுக்கொண்டு, அதற்கு மறுமொழி புகலவும் அறியாமல் திண்டாடியவனாய் இரண்டு மூன்று நாட்களை எப்படியோ கழித்துவிட்டான் தியாகேசன். அதற்குமேல் அவனால் பொறுக்க முடியவில்லை. சிந்தனைச் சுழலின் கடும் வேகத்தில் சிக்கித் தவித்த அவன், அதினின்றும் மீள வழி கண்டுபிடிக்க முயன்றான்.

உமாநாதனும் தனது இளம் முதலாளியின் வதனம் வாட்டமுற்று வருவதைக் கவனித்துத் தன் புத்தியைத் தானே கடிந்துகொண்டான்! ஆனால் பழியைத் தன்மீது சுமத்த அவன் விரும்பவில்லை. எஜமானனின் மனதைத் திருப்திப்படுத்துவதில் அவனுக்கு அளவற்ற ஆசைதான்.

எனினும் தன் மனதில் தோன்றிய 'எண்ணத்தை' எஜமானிடம் வலுவில் வெளியிட அவன் தயங்கினான்.

ஆனால் மூன்று நாட்களுக்குப் பிறகு தியாகேசனே பேச்சை ஆரம்பித்தான். "உமா! அந்தப் 'பயல்' யார், 'குட்டி' யார் என்பதையெல்லாம் எவ்விதத்திலும் நீ விசாரித்து அறிந்துவரவேண்டும்! இந்தத் 'துப்பறியும் தொழிலில்' நீ புதியவனல்ல. எத்தனையோ ஆண்டு பழக்கப்பட்டவன்தான்! ஆதலால் என்றும் போல் இப்பொழுதும் வெற்றியையேயடைவாய் என்று நம்புகிறேன்!"



உமாநாதனின் 'எண்ணமும்' அதுதானே! ஆதலால் அவனுக்குப் பெரு மகிழ்ச்சி! நிமிர்ந்து தனது கூரிய கண்களால் தியாகேசனைப் பார்த்தான். அவனது வாடிய அழகிய முகத்தில் ஆர்வமும் ஆசையும் ஒருங்கே மின்னிடுவதைக் கண்டான்...

"தொழில் புதிதல்ல எஜமான். ஆனால் ஊர்..."

"சே! பொய் சொல்லாதே! இன்னும் ஊர் உனக்குப் புதிதா என்ன? ஒரு புதிய ஊருக்கு வந்தால் இரண்டே நாளில் அது உனக்குப் பழைய ஊராகி விடுமே! எனக்குத் தெரியாதா அது? நாம் இங்கு வந்து மாதம் ஒன்றாகிறதே...!"

"ம்! அதைப்பற்றியில்லை..."

"பின் நான் சொன்னபடியே செய்! அந்தப் 'பயல்' ஆள் மாராட்டம் செய்கிறான் என்று சொல்வதற்கில்லை—ஏனென்றால் என் முகச் சாயல் 'இயற்கையாகவே' அவனுக்கு அமைந்திருக்கிறது. வேஷமென்று சொல்ல முடியாது. எனினும் முற்றிலும் விசாரிக்காமல் நாம் ஒன்றும் முடிவு செய்வதற்கில்லை. அனைத்தும் விபரமாக விசாரித்து வந்து சொல்! அந்த 'மின்னல் கொடி' யாரோ?...என் மனதை அப்படியே அள்ளிவிட்டாள்!'

புவலூர் 'ராஜா'வின் கட்டளையைத் தலைமேல் தாங்கிக்கொண்டான் உமாநாதன். அவன்தான் எதற்கும் தயாராயிருந்தானே!

ஐந்தாறு நாட்களில் உமாநாதனின் 'துப்பறியும் தொழில்' வெற்றியின் உச்சியையடைந்து விட்டது! அந்த இளைஞன் பெயர் மனோகரன் என்று தெரியவந்தது. வலையர் 'இன'

மாம். அந்தப் பெண்ணும் அதே இனம். பெயர் விமலா. ஆனால் விதவை. அவளது கிழட்டுக் கணவன் மாண்டு இரண்டு ஆண்டுகளாகின்றன. வயது சென்ற தாயாரைத் தவிர வேறு யாருமில்லை அவளுக்கு. 'நாலு' வீடுகளில்உழைத்து அத் தாயார் தான் தனது வயிற்றையும், தன் பதினாறு வயது விதவையான மகளின் வயிற்றையும் கழுவி வருகிறாள். கூண்டிலடைபட்ட பச்சைக் கிளிபோல் குடிசைக்குள் அடைக்கப்பட்டிருந்தாள் அழகி விமலா. உலக சுகங்கள் அவளுக்கு எட்டாத நிலையிலிருந்தன. தாமரை இலைத் தண்ணீர் போல் தத்தளித்த அந்த அழகிய மலருக்கு இன்பம் கொடுக்க வந்த 'வண்டாகிய' இனிய இளைஞன் மனோகரன். 'ஏதோ கொஞ்சம்' படித்தவனாம், அனாதை. ஒரு மில்லில் வேலை பார்க்கும் தொழிலாளி அவன். சோம்பலே அற்ற நல்ல உழைப்பாளி. அவன் விமலாவைக் காதலிக்கின்றான்! அவளை அவன் 'மறுமணம்' செய்து கொள்ளப்போகிறானாம்!

மேற்கண்ட விபரங்களை உமாகாந்தன் மூலம் அறிந்து கொண்ட தியாகேசன் விழிப்புற்றான். அன்று 'ஜன்னல் வழியே' வந்த அழகிய இனிய முகத்தைக் கண்ட பின்னர் தியாகேசனின் உள்ளம் அவளையே சுற்றிச்சுற்றி வட்டமிட்டது. எவ்வளவோ கற்பனைகளை உருவாக்கினான். காதல் நாடகங்களில் நடித்துத் தேர்ச்சிபெற்ற தியாகேசனின் மனதின் ஓர் மூலையில் விழுந்த காதல் பொறி மெள்ள . மெள்ள வளர்ந்து காமத் தீயாக மாறியது...


மனோகரன் அந்தக் கட்டழகியை மணக்கப் போகிறான் என்று அறிந்ததும் தியாகேசனின் உள்ளம் பொறாமையாலும் வெறுப்பாலும் கொந்தளித்தது! தனக்குக் கூடக் கிட்டாத அந்த இனிய கனி அந்தக் கூலிக்காரப் பயல் மனோகரனால் பறித்துச் சுவைக்கப்படுவதா? ஆ! அந்தக் கனி மட்டும் தனது கைக்கெட்டினால்...

"உமா! அவள் வலைப் பெண்ணா?



அதனாலென்ன? அவள் பருவ அழகொன்றே போதுமே, மூவுலகையும் அடிமைப்படுத்த! அவளை எப்படியாவது நான்... நான் அடைந்தேயாகவேண்டும் உமா!''

ஜமீந்தாரின் குரலில் ஒலித்த கண்டிப்பு உமாவைத் திடுக்கிட வைத்தது. ஆனால் ஜமீந்தாரை எதிர்க்க அவன் யார்? எத்தனையோ முறை ஜமீந்தாருக்குப் 'பலாகமான' பெண்களைப் 'பிடித்துக் கொடுத்தவன்' அவன். சுக போகப் பிரியனும், காமவெறியனுமாகிய மைனர் தியாகேசனின் வலையில் வீழ்ந்து பலியான ஏழைப் பெண்கள் எத்தனையோ பேர்! அவனைக் கட்டுப்படுத்தி வளர்க்கப் பெற்றோரோ, பெரியவர்களோ இல்லாமற் போய்விட்டபடியால் அவனது ஆட்சி 'ஏகாதிபத்திய' ஆட்சியாகவே மாறிவிட்டது! பின் கேட்கவா வேண்டும்? அவனைத் தூண்டிவிட உமாநாதன் வேறு அகப்பட்டான்! அவனோ 'தேர்ச்சி பெற்ற' வேடன்! வேட்டையில் ஒரு நாளும் அவன தோல்வியைக் கண்டதில்லை. 'நல்ல' கனிகளை எஜமானுக்குக் கொண்டு வருவான்! அப்படியிருக்க, இந்த 'வலைப்பெண் விமலா' அவனுக்கென்ன ஒரு 'பிரச்னை'யா? அவள் ஏழைப்பெண் — வறுமையால் வாடுபவள்; உலக இன்பத்திற்காக ஏங்கும் இளம் விதவை. ஜமீந்தாரிடம் பணமாகிய 'மந்திரம்' இருக்



கையில் என்ன கவலை? அந்தக் கூலிப்பயல் மனோகரனுக்குக் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து ஒதுக்கி விட்டால் போகிறான்—விமலா ஜமீந்தாரின் விளையாட்டுக் கருவியாகிறாள்!... எனினும் ஏனோ உமாநாதனின் கடின நெஞ்சம் கூட முதல் முறையாக சற்றுத் தயக்கத்தைக் கண்டது! விமலா தான் விரிக்கும் வலையில் லேசுவில் விழுந்துவிட மாட்டாள் என்ற பயம்! காரணம் மனோகரன்! அவனது கட்டுக்கோப்பான உடம்பும், எவரையும் லட்சியம் செய்யாத தீரப் பார்வையும், கம்பீரத் தோற்றமும் அவனைச் சற்று அச்சப்படுத்தின. ஜமீந்தாரும் அவரைப் போலத்தான் இருக்கிறானெனினும், 'ஏதோ' ஒரு வித்தியாசம் - பெரும் வித்தியாசம் - இருவரையும் பிரித்து வைக்கின்றாற்போல் பட்டது அவனுக்கு...

அவன் மனம் குழம்பியதென்னவோ உண்மைதான். எனினும் தனது தொழிலில் தோல்வியைப் பெற்று அதனால் எஜமானன் மனதில் நம்பிக்கையின்மையை வளர்க்க அவன் விரும்பவில்லை. மனோகரனுக்குத்தான் அஞ்சுவதாக வெளிக் காட்டிக்கொள்ள அவனுக்கு வெட்கமாயிருந்தது! ஆதலால் விமலாவை எவ்விதமும் தன் எஜமானனுக்குப் பரிச்சயமாக்கி விட அவன் உறுதி பூண்டான்...அந்த உறுதியும் முடிவில் வெற்றியையே கண்டது!

"விமலா! ஏன் பிணங்குகிறாய்? என்னைப் பார்!"

விமலா பார்த்தாள். தியாகேசன் அழகன்தான். பளபளப்பான ஈசரிக உடையில் கோலாகலமாக விளங்கினானென்பது உண்மை...அவளது காதலன் மனோகரனுக்கும் 'இந்த' ஜமீந்தாருக்கும் வித்தியாசமில்லை என்பதும் உண்மைதான்!...ஆனால் காதலுக்கும் காமத்துக்கும் வித்தியாசமில்லையா என்ன?

"ஜமீந்தார்! தங்கள் செல்வம் என்னை ஒன்றும் செய்ய முடியாது! நானும் 'அவரும்' உயிர்க்குயிரான காதலர்கள். விதவை என்றும் பாராது என்னை மணக்க வந்த வீரர் அவர். அவரது சத்தியக் காதலைப் புறக்கணித்துவிட்டு, அற்பப் பணத்திற்காகத் தங்கள் ஆசைக்குப் பலியாக மாட்டேன்! தயவுசெய்து போய் வாரும்...'

இருவரும் குளக்கரை சமீபமாக ஒரு தோப்பிற்குள் பன்னீர் மரத்தடியில் நின்றுகொண்டிருந்தனர்! இனிமையாக வீசிக்கொண்டிருந்த இளந்தென்றலை அனுபவித்துக்கொண்டு தனியே உட்கார்ந்துகொண்டிருக்கையில், தன்னைத் தொந்தரவு செய்யவந்த ஜமீந்தார் மீது அவளுக்குக் கோபம் — வெறுப்பு. தனியேயிருந்த போதிலும்—இளங்காளையான தன்னிடம் தனியே அகப்பட்டுக் கொண்ட போதிலும் இந்தப் பெண்ணிற்கு எவ்வளவு தைரியம் என்ற கோபம் அவனுக்கு!

"விமலா-அசடு! உனக்கு ஒன்றுமே தெரியவில்லை! என்னோடு புவலூருக்கு வந்துவிடு. பெரிய அரண்மனை - ஆயிரம் வேலையாட்கள்! குவியலாகக் கிடக்கும் பொன்! உனக்கு எவ்விதக் குறையுமில்லை! ராணியாக இருக்கலாம்...விமலா!"

ஆர்வத்தோடு அவளை நோக்கினான் அவன். அவனது அழகிய முகத்தில் பிரதிபலித்த காதலின் தாபமும், ஆசையும், கெஞ்சுதலும் அவள பெண் மனதைக் குத்திவிட்டன. ஒரு இளம் ஜமீந்தார் - கட்டழகன் - நாகரிகத்தின் இருப்பிடமானவன் — தன்னை வந்து கெஞ்சுவதைக் கண்டு பச்சாதாபப் பட்டாள். அதனால அவள் விழிகளில் கண்ணீர்கூடத் ததும்பியது! ஆனால் உண்மைக் காதலைப் புறக்கணித்து விட்டுக் காமத்தை நாட அவளுக்கென்ன பைத்தியமா? கபடமற்ற தன்மையை அப்புறப்படுத்தி விட்டுக் கபடவேஷத்தை எட்டிப் பிடிப்பதா? இவையெல்லாம் வெறும் பசப்புச் சொற்களென்று அவள் அறியாளா என்ன?

"அதெப்படி ஜமீந்தார்? ஏற்கெனவே ஒரு 'ராணி' இருக்கும் போது..."

"அதனாலென்ன? ஆயிரம் ராணிகளை ஆயிரம் ஆண்டுகளுக்குக் காப்பாற்றச் சக்தி வாய்ந்தவன் நான் என்பதை மறந்துவிட்டாயா...?"

விமலாவின் அழகிய விழிகள் சட்டென்று சிவந்து அனலைக் கக்கின!

"அட கொடியோனே! ஆசை நாயகியாகச் சொல்கிறாயா?... மனோகரன் சுத்தவீரர். ஏழ்மையில் பெருமை கொள்பவர்! என்னை மனைவியாக்கத் துணிந்த சுத்த நெஞ்சமுள்ளவர்! அவரோடு குடிசையில் வாழ்வது, உம்மோடு பொன் மாளிகையில் வாழ்வதை விட எவ்வளவோ மேலானது! அவருக்கு நீர் ஈடாக முடியுமா..ஜமீந்தார்! தயவுசெய்து போய்விடும்! ஏழைப் பெண்களின் வாழ்க்கையைப் பாழாக்குகிற உமது நீசத்தனம் எனக்குத் தெரியும்!"

தர்க்கம் முற்றியது...

காம வெறியாலும் கோபாவேசத்தாலும் தியாகேசனின் கண்கள் குருடாயின. கோபமும், சோகமும் சேர்ந்து உருவானவளாய்க் கூந்தல் காற்றில் அசைந்தாட, பொற்சிலை போல் நின்று கொண்டிருந்த அந்த இளம்பெண்ணின் பருவ அழகு அவனை நிலைதடுமாறச் செய்தது. தன்னையே எதிர்க்கத் துணிந்த அப்பேதையின் கற்பை அழிக்கவும் துணிந்துவிட்டான் காளை!

"அடி கள்ளி! தப்பித்துக் கொள்ளலாமென்று நினைக்கிறாயா? அந்த கூலிக்காரப் பயல் 'பிரத்யட்சமாகி' உன்னைக் காப்பாற்றப் போகிறான் என்பது உன் எண்ணமா? நான் ஜமீந்தார் - என் புகழ் நாற்புறமும் தெரியும் - என்னை அவனால் என்ன செய்ய முடியும்? உன் மனதைக் கலைத்தது அந்தப் பயல்தானே!" பொறாமையாலும் சினத்தாலும் பைத்தியமாகி



"சார் நீங்க சின்னதா ஒரு கடை வைக்கப் போறதாகச் சொன்னிங்களே"

"ஆமாம். பொடிக்கடை வைக்கிறதாகச் சொன்னேன்"

விட்ட தியாகேசன் தனது இரும்புப் பிடியால் விமலாவின் தளிர்க் கரத்தை இறுகப் பற்றினான். விமலா திமிறினாள் - அலறினாள். அவளுடைய கொடி போன்ற மெல்லிய உடல் அவன் அணைப்பில் சிக்கியது...

மறுவினாடி...என்னவெல்லாம் நடந்து விட்டிருக்குமோ? ஆனால் ஒரு பலத்த இளங்கரம் பின்னேயிருந்து தியாகேசனின் தலையைப் பலமாகத் தாக்கிற்று. "ஆ!" என்ற ஒரே அலறலுடன் அவன் கீழே சாய்ந்தான்!......விமலா மனோகரனின் மென்மையான அணைப்பில் விழுந்தாள்! சில வினாடிகள்....பயங்கர மௌனம் ஆட்சி செலுத்தியது...

பிறகு மனோகரன் மெதுவாக நிமிர்ந்தான். "விமலா! நீ இவ்வழியே வீட்டிற்குப் போய்விடு! ஒருவரும் பார்க்க மாட்டார்கள்! நான் இந்த ஜமீந்தார் - இல்லை என் சகோதரன் — இவனோடு 'இரண்டு' வார்த்தை பேசிவிட்டு வருகிறேன்!...சீக்கிரம் போய் விடு! பயப்படாதே கண்மணி... அம்மாவிடம் ஒன்றும் சொல்லாதே!...ஆம்! எனக்கெல்லாம் தெரியும்!" என்றான். கண்களில் துளிர்த்திருந்த நீரைத்துடைத்து விட்டுத் திரும்பினாள் விமலா. தோப்பைவிட்டு அகன்றாள். அவளது அழகிய உருவம் கண்ணுக்கு மறையுமட்டும் பார்த்துக் கொண்டே நின்ற மனோகரன் ஒரு பெருமூச்சுடன் திரும்பினான்.

தியாகேசன் தரையினின்று மெதுவாக எழுந்தான்...இருவரும் எதிரெதிரே நின்றனர் — சீறும் புலிகள்போல!

ஜமீந்தார் தியாகேசனின் கண்களில் மின்னிட்ட காமத் தீ இன்னும் அணையவில்லை! பொறாமையும் வெறியும் கலந்த பார்வை! மனோகரனின் கண்களிலோ சத்தியக் காதலின் உணர்ச்சி ஒளி வீசியது! வீரம் செழிக்கும் பார்வை!

"கூலிக்காரப் பயலால் ஒன்றும் செய்ய முடியாதென்று தானே சொன்னாய்?"

"சொல்லியிருக்கலாம் - ஆனால் அதை இப்போது பேசி என்ன பயன்? உன்னை வாழாவெட்டியாக்க என்னிடம் சக்தியுள்ளது என்பதை மனதில் வைத்துக் கொண்டு பேசு! ஆனால் என்னைப் போலவே நீயும் இருப்பதால் ஏதோ ஒருவித பாசம் என்

ளைத் தடுக்கிறது! ஆதலால் நன்றியோடு நடந்துகொள். தீயோடு விளையாடுவது நல்லதல்ல!...... இதோ பார்; உனக்குப் பணம் தருகிறேன் - எவ்வளவு வேண்டுமானாலும் கேள் தருகிறேன் - அந்தப் பெண்ணை - விமலாவை - எனக்குத் தந்துவிடு!''

அவ்வளவுதான் அவன் பேசினன்! அதற்குள் - வெறிபிடித்த சிங்கம்போல் அவன்மீது பாய்ந்தான் மனோகரன்! இருவரும் தரையில் விழுந்து புரண்டனர். புழுதி நாற்புறமும் எழும்பிப் பறந்தது! ..ஆம்! அது ஒருவிதத்தில் 'மரண'ப்போராட்டமே!

"பணத்தைக் காட்டி மானத்தை வாங்க எண்ணினையா கயவா? உன்னைப்போல் எத்தனை பேர் இருக்கின்றனர் உலகில்! ஏழ்மையைப் பலி வாங்கத் துணிந்த உன்னை, நான் பலியாக்காமல் விட்டுவிடுவதா?"

மனோகரனின் கொதிக்கும் உள்ளத்தினின்று பீறிட்டுப் பாய்ந்து தெறித்த அனல்மொழிகள் அச்சொற்கள்!

இருவரும் முரடர்கள் - ஒருவர் பிடியை ஒருவர் விடவில்லை... ஆனால் ஜமீந்தாரின் சட்டைப் பையிலிருந்து விழுந்த சிறு துப்பாக்கி மனோகரனின் கையில் சிக்கிவிட்டது !

ஒரு வெற்றிச் சிரிப்பைக் கிளப்பினன் மனோகரன்! அடுத்து வரும் தன் செய்கையின் மீது அவன் புத்தி சிந்தனை செய்யவில்லை!

ஒரே விநாடிதான்..."படார்!" என்ற ஒரு வேட்டுச் சப்தம். புகை கிளம்பி நாற்புறமும் பரவியது. ஆம்! மனோகரன் சுட்டு விட்டான்!

குண்டு பாய்ந்ததும் பிடியை விட்டு விட்டு மண்ணில் புரண்டான் தியாகேசன். அவன் மார்பிலிருந்து பீறிட்டுப் பாய்ந்த இரத்தம் தாவிக் கிடந்த பன்னீர்ப் பூக்களையும் மண்ணையும் இரத்தமாக்கியது!

மரண வேதனையைத் தாங்க மாட்டாதவன் போல் தன் கவர்ச்சியான கண்களை அகலத் திறந்து மனோகரனை விழித்து நோக்கினன் தியாகேசன்!

மனோகரனின் துப்பாக்கி ஏந்திய கை, அவனது சொந்த மார்பிற் கெதிரே குறிவைத்துக் கொண்டிருந்தது...

மனோகரனின் மின்னும் கண்கள், வீழ்ந்து கிடந்தவனின் கண்



"என்னங்க கதையை ரொம்ப நீளமா எழுதிவிட்டீர்களே"

"அதனாலென்ன, அகலமான காகிதத்தில் எழுதிப்பிட்டாப் போகிறது"

களைச் சந்தித்தன!...ஏதோ ஒரு வித விபரீத உணர்ச்சியால் தாக்கப்பட்டவன் போல் இதழ்களைத் திறந்தான் தியாகேசன்...

"ஜமீந்தார்! இனி நீ வாழப் போவதில்லை - நானும் வாழமாட்டேன்! விமலா இரண்டு பேருக்கும் கிட்டாத பொருள்! உன் பணத்திமிர் நம் மூவரின் வாழ்க்கையையும் பாழாக்கிற்று! நீ சாகப்போகிறாய்; நானும் இதோ பின் தொடர்கிறேன். அதற்குள்...அதற்குள்...அநேக வருஷங்களாக என் நெஞ்சில் அழுக்கி வைக்கப்பட்டிருக்கும் ஒரு மர்மத்தை உன்னிடம் சொல்லிவிடப் போகிறேன்!"

தியாகேசன் மிரளமிரள விழித்தான்...

மனோகரன் தொடர்ந்து பேசினான். "ஜமீந்தார்! நாம் இரண்டு பேரும் 'சாயலில்' என் இவ்வளவு 'ஒற்றுமை'யாகவிருக்கிறோம் என்ற கேள்விக்கு விடையே இந்த இரகசியம்! நீ யாரைக் 'கூலிக்காரப் பயல்' என்று எண்ணிக் கொண்டிருந்தாயோ, அந்த...அந்த மனோகரன் உனது ஒரே தம்பி...! உன் சகோதரன்! நாமிருவரும் ஒரே தந்தையின் மக்கள்!"

அலற முடியவில்லை ஜமீந்தாருக்கு. எழமுயன்றான் — அதுவும் முடியவில்லை.

அவனது கரங்கள் மண்ணைக் கிறின. சாவின் பயங்கரம்—அறியாமற் செய்த விபரீதத்தினலேற்பட்ட கோர முடிவின் பயங்கரம்—அவன்மீது கருநிழலிட்டது. சாகும் தருவாயில் கேட்கும் எதிர்பாராத செய்தி வேதனையை அத்துமீறச் செய்தது...

மனோகரன் மேலும் தொடர்ந்தான். "வெகு காலமாக உன்னை நான் அறிவேன்! ஆனால் என்னை நீ அறியமாட்டாய்! காரணம் செல்வ நிலையின் வேற்றுமை! ஒரே இரத்தம்—ஆனால்...?"

மனோகரனின் வெறிச் சிறிப்பு அந்தத் தோப்பையே கிடுகிடுக்கச் செய்தது! துப்பாக்கியைப் பற்றியிருந்த அவனது கரம் நடுங்கியது.

தியாகேசன் நடுங்கினான்.

"தம்பி!...நிஜமாகவா? எப்படி?"

"ஆமாம்...அண்ணா! அதுவும் பணத் திமிரின் சதிதான்! ஜமீந்தார்—அதாவது நம் தந்தை—என்...என்...கண்மணி விமலாவைப் போன்ற ஒரு ஏழைப் பெண்ணைக் காதலித்துக் கற்பழித்தாராம். அதன் பலன் நான்! நீ அவரது செல்வ மகன்! அதாவது புவலூர் ராணியின் வயிற்றில் பிறந்தவன் நீ! ராணியின் மகனாகப் பிறந்த செல்வாக்கு உனக்கு! பணத்திற்குப் பலியான ஒரு ஏழைப் பெண்ணின் மகனாகப் பிறந்த இழிவு எனக்கு! எல்லாம் பணத் திமிரின் பலன்!'

மனோகரன் மறுபடியும் ஒரு வெறிச்சிரிப்பை எழுப்பினான்... அதைத் தொடர்ந்த வேட்டொலி அந்தச் சிரிப்பொலியை அமுக்கிவிட்டது! மனோகரன் தியாகேசனின் அருகில்—வெகு அருகில் - மல்லாந்து வீழ்ந்தான்.

"தம்பி!...என்னை...என்னை... மன்னித்துவிடு!"

தியாகேசன் பேசிய கடைசிச் சொற்கள் இவை!

"மன்னிப்பதினால் பலன் என்ன...? பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று பல வருடங்களாக நான் காத்துக்கொண்டிருந்தேன்—உன்னை நிழலைப் போல் பின்தொடர்ந்துகொண்டிருந்தேன்...ஆனால் பழி வாங்காமல் உன் உயிரையே வாங்கி விட்டேன்! என் வேலை முடிந்தது...அதனால் நானும் போகிறே—மன்னிப்பது எதற்காக?"

ஓர் நீண்ட பெருமூச்சுடன் கண்களை மூடிக்கொண்டான் மனோகரன்...பக்கத்தில் பக்கத்தில் உயிரற்றுக் கிடந்த அந்த இரு சகோதரர்களின் சடலங்களோடு அவர்களது 'இரகசியமும்' மறைந்துவிட்டது! அந்த 'இரகசியத்திற்'கும் உயிரற்றுப் போயிற்று! உலகம் அதை அறிய முடியாமல் போயிற்று! செத்தவர்களோடு அதுவும் செத்துப் போயிற்று...

காற்று குமுறிக்கொண்டு வீசியது. பன்னீர் மலர்கள் 'பலபல' வென்று அந்த இளம் சகோதரர்களின் சடலங்கள்மீது பொழிந்தன...

மறுநாள்......எங்கும் ஒரே அமர்க்களம் - ஒரே பேச்சு! புவலூர் ராஜா 'அநியாயமாக'க் கொல்லப்பட்ட பேச்சுத்தான் எங்கும்! காட்டுத் தீயைப்போல் நாலா திசைகளிலும் அது பரவியது...

பத்திரிகைகளில் கொட்டை கொட்டை எழுத்துக்களில் செய்தி வெளியானது! 'தர்மப் பிரபு இறந்துவிட்டாரே' என்று சீமான்கள் வருந்தினர்! பத்திரிகையாசிரியர்கள் புலம்பினர்! கலெக்டர்கள் விசித்தனர்! ராஜாக்கள் மார்பிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டனர்! கவர்னர்கள் கண்ணீர் விட்டனர்! மக்கள் அழுதனர்!

செல்வத்திற்கும் புகழுக்கும் இருப்பிடமான 'புவலூர் ஜமீன்தார்' - காமத்திற்குப் பலியான கோழை - 'ராஜ மரியாதை' யுடன்-லட்சக் கணக்கான மக்கள் சூழ்ந்து நின்று 'துக்கம் சொல்ல'ச் சந்தனக் கட்டைகளில் வைத்துத் தகனம் செய்யப்பட்டான்!

பணம் செய்த வேலை! அதே பணம் செய்த 'வேலை'யால் ஏழ்மையாக்கப்பட்ட அவனது இரத்த சகோதரன் - உண்மைக் காதலுக்காக உயிர்விட்ட வீரன்- அவனுக்காகப் புலம்ப ஒருவர் கூட இல்லாமல், தன்னந்தனியே கொள்ளிக் கட்டையில் எரிந்து சாம்பலானான்!

அவனுக்காகக் கதறியழ இருந்த ஒரே பெண்ணும் அப்போது இல்லை - ஏனென்றால் அவள் உடல் அப்போது ஆற்று வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தது!

சிறுவர் அரங்கம்
பொன்னி

சர்க்கஸ் ரங்கு

டி. ஜே. இன்பராஜ்

[ரங்கு ஏழைப்பையன். அதனால் அவன் பள்ளிக்கூடத்தில் படிக்கமுடியவில்லை. அவனுடைய அம்மா வடை சுடுவாள். அவற்றைப் பட்டணத்தில் கொண்டுபோய் ரங்கு விற்று வருவான். ஒருநாள் வடை சுடும் எண்ணெய்ச்சட்டியில் ரங்கு கையை விட்டுவிட்டான். கை வெந்துவிட்டது. அதனால் அவன் வடைவிற்கப் போகவில்லை. புண் ஆற ஒரு மாதம் பிடித்தது. ரங்கு திரும்பவும் பட்டணத்திற்கு வரும்போது அங்கே 'சர்க்கஸ்' நடந்துகொண்டிருப்பதை அறிந்தான். சர்க்கஸ் பார்க்கவேண்டுமென்று அவனுக்கு ஆசை உண்டாகியது. ஆனால் காசுக்கு எங்கேபோவான்? தனது அருமை அம்மாவிடம் ஓடிவந்தான்....]

3

"அம்மா, அம்மா, பட்டணத்திலே சர்க்கஸ் நடக்குது. இதோ பார்த்தியா நோட்டீசு?" என்றான் ரங்கு அவன் அம்மாவிடம்.

"ஊம்..." என்று அவன் அம்மா அசிரத்தையுடன் சொன்னாள்.

"டிக்கட் எட்டணாம்மா. நான் சர்க்கஸ் பார்க்கட்டுமா?"

"எட்டணாவா? எட்டணாவிற்கு எங்கேடா போறது?"

"சர்க்கஸ் பார்க்காட்டாப் பரவாயில்லை. மிருகங்களையாவது பார்த்துவிட்டு வர்றேன். ஓரணாக் குடு"



"உனக்கு ஓரணாக் கொடுத்துட்டா அரிசி வாங்கப் பணம் குறையுதே. இன்னொரு நாளைக்குத் தர்றேன்."

ரங்கு அதற்கு மேல் பேசவில்லை. அம்மா கையில் பணமிருக்கும் பொழுது வாங்கிக் கொள்ளலாமென்று இருந்துவிட்டான்.

அன்று மாலை ரங்கு வழக்கம்போல் பட்டணத்திற்குச் சென்றான். வடைகளை விற்றுத் திரும்பும் பொழுது அந்தவழியாகச் சர்க்கஸ் ஊர்

வலம் வந்தது. ஒருவன் ரங்குவிடம் நோட்டீஸைக் கொடுத்தான்.


அன்றுதான் சர்க்கஸ் கடைசியென்றும், அதனுல் இரவு ஆறு மணி முதல் பத்துமணி வரையில் புதுமாதிரி வித்தைகள் காண்பிக்கப்படுமென்றும் நோட்டீஸில் கண்டிருந்தது.

ரங்கு யோசித்தான். அவன் கையில் வடை விற்ற பணம் எட்டணு இருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் பிறகு சர்க்கஸ் பார்க்க முடியாதென்று அவன் நினைத்தான். உடனே அவன் சர்க்கஸ் கொட்டகையை நோக்கி நடந்தான்.

மைதானத்தில் பெரிய கூட்டம். அநேகர் சர்க்கஸ் பார்க்க வந்திருந்தனர், டிக்கட் கொடுக்குமிடத்திலிருந்து 'க்யூ' வரிசை அனுமார் வால்போல் நீண்டுகொண்டிருந்தது. ரங்கு கஷ்டத்துடன் ஒரு டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே சென்ருன்.

சர்க்கஸ் ஆரம்பமானது. விதவிதமான வித்தைகள் நடைபெற்றன. கண்களைத் துணியால் கட்டிக்கொண்டு கத்தி எறிவது, எரியும் வளைவிற்குள் பாய்வது, பார்களுக்குக் கரணம் அடித்துப் போவது போன்ற அதிசய வேலைகளைக் கண்டு ரங்கு ஆனந்தமடைந்தான். தன் களிப்பைக் கை தட்டுவதன் மூலமாக வெளிப்படுத்தினுன்.

பார் வேலைகள் முடிந்தன. காட்டு மிருகங்கள் செய்யும் வேலைகள்தாம் பாக்கி. ஒரு பெரிய இரும்புக்கூண்டிற்குள் பெரிய புலி கம்பீரமாக நின்றுகொண்டிருந்தது. சர்க்கஸ் மானேஜர் கையில் சாட்டையுடன் கூண்டிற்குள் நுழைந்தார். அங்கிருந்த



ஒரு முக்காலியின்மேல் ஏறும்படி புலிக்கு உத்தரவிட்டார். புலி ஏறவில்லை. பயங்கரமாக உறும ஆரம்பித்தது. மானேஜர் சாட்டையினால் அடித்தார். புலி அவர்மேல் பாய்ந்தது. அவர் விலகிக்கொண்டார். பாய்ந்த புலி கூண்டுக் கதவின்மேல் விழுந்தது. கவனிப்பின்மையால் பூட்டப்படாதிருந்த கதவு திறந்துகொண்டது. புலி வெளியே வந்துவிட்டது!

சர்க்கஸ் பார்ப்பவர்களின் கூட்டத்தில் ஒரே பரபரப்பு. எல்லோரும் எழுந்து, மூலைக்கு ஒருவராக ஓடினர். ரங்கு என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தான். பிறகு ஒருபக்கம் ஓட ஆரம்பித்தான். அவனுடைய கால்கள் தடுமாறின. கீழே விழுந்து விட்டான். அவனை மிதித்துக்கொண்டு பலர் ஓடினர். வலி தாங்காமல் ரங்கு மூர்ச்சையாகிவிட்டான்.

ரங்கு கண்களைத் திறந்து பார்த்தான். ஒரு மெத்தையில் படுத்திருப்பதை உணர்ந்தான். தலை வலித்தது. கையினால் தலையைத் தடவினான். தலையில் கட்டுப் போடப்பட்டிருந்தது. "ஏன் தலையில் கட்டு இருக்கிறது?" என்று யோசித்தான். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. தலையை அசைத்தான். தலை வலித்தது.

அவனுக்கு நடந்த சம்பவங்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஞாபகத்திற்கு வந்தன. அம்மாவுக்குத் தெரியாமல் சர்க்கஸுக்குப் போனது, அங்கு வேடிக்கைகளைப் பார்த்து ஆனந்தப்பட்டது, கடைசியில் புலி, கூண்டைவிட்டு வெளியே வந்தது இவைகளெல்லாம் அவனுக்குச் சினிமாப் படம்போல் தொடர்ச்சியாகத் தெரிந்தன. "அந்தப் புலி எவ்வளவு பெரிய புலி!" என்று ரங்கு மனத்திற்குள் சொல்லிக்கொண்டான். புலியை நினைத்தவுடன் அவனுடைய உடல் நடுங்கியது. அவனுடைய கண்களுக்கு முன்பாகப் புலியின் தலை தெரிந்தது. அந்தப் புலி அவனைப் பார்த்து உறுமுவது போலிருந்தது. ரங்கு பயத்தினால் கண்களை இறுக மூடிக்கொண்டான்.

சிறிது நேரத்திற்குப் பிறகு ரங்கு கண்களைத் திறந்தான். அவனுக்கு முன்னால் மறுபடியும் ஒரு தலை தெரிந்தது. கூர்ந்து பார்த்தான். அது, புலியின் தலையல்ல. மனிதருடைய தலைதான். அந்த மனிதரை எங்கோ பார்த்திருப்பதாக அவனுக்குத் தோன்றியது. ஆம். அவர்தான் சர்க்கஸ் மானேஜர். ரங்கு அவரைப் பார்த்துச் சிரித்தான்.

"என்ன தம்பி, கொஞ்ச நேரத்திற்குமுன் என்னைப் பார்த்து ஏன் கண்களை மூடிக்கொண்டாய்? பயந்துவிட்டாயா?" என்று அவர் அன்புடன் அவனைக் கேட்டார். ரங்கு மௌனமாக இருந்தான்.

"தம்பி, நேற்று ராத்திரி கூண்டைவிட்டுப் புலி வெளியே வந்துவிட்டதல்லவா? அப்பொழுது ஓடிய மக்கள் உன்னை மிதித்துவிட்டார்கள் போலிருக்கிறது. நீ கீழே விழுந்து கிடந்தாய். அப்புறம் உன்னைக் குதிரை வண்டியில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தோம். இப்பொழுதுதான் உனக்கு மயக்கம் தெளிந்திருக்கிறது. உன் அப்பா அம்மா எங்கே இருக்கிறார்கள்? அவர்கள் இருக்குமிடத்தைச் சொன்னால் உடனே அவர்களை வரவழைக்கிறேன்" என்று சர்க்கஸ் மானேஜர் ரங்குவைத் தட்டிக்கொடுத்துக் கொண்டே சொன்னார்.

"அம்மா" என்ற வார்த்தையைக் கேட்டவுடன் ரங்குவிற்கு வீட்டு ஞாபகம் வந்தது. "ஐயையோ வடை விற்ற பணத்திற்குச் சர்க்கஸ் பார்த்துவிட்டேன். தலையில் வேறு காயம். இந்த நிலைமையில் அம்மா பார்த்தால் என்ன சொல்லுவாள்?" என்று ரங்கு பயந்தான். அதனால் அவன் மானேஜர் கேட்டதற்குப் பதில் சொல்ல முடியவில்லை.

"உனக்கு அப்பா, அம்மா இல்லையா?" என்று மானேஜர் மறுபடியும் அவனைக் கேட்டார். ரங்கு சமயோசிதமாக "ஆமாம்" என்றான்.

"உன் தலையிலுள்ள காயம் குணமான பிறகு நீ எங்கே போவாய்?"

ரங்கு பேசவில்லை. உடனே மானேஜர், "இன்றிரவு நாங்கள் வெளியூர் போகிறோம். நீயும் எங்களுடன் வருகிறாயா? உன்னை எங்கள் சர்க்கஸ் கம்பெனியில் சேர்த்துக்கொள்ளுகிறோம். நீ சர்க்கஸ் வேலைகளைக் கற்றுக்கொண்டவுடன் உனக்கு நல்ல சம்பளம் கொடுக்கிறோம்" என்றார்.

ரங்கு சம்மதித்தான்.

அன்றிரவு சர்க்கஸ் கம்பெனி வெளியூருக்குச் சென்றது. அதில் ரங்குவும் இருந்தான். அம்மாவையும் தன் அருமை சிநேகிதர்களையும் விட்டுப் பிரிவது அவனுக்கு வருத்தமாக இருந்தது. எப்படியோ மனத்தைத் தேற்றிக்கொண்டான்.

இரண்டு தினங்களுக்குப் பிறகு வெளியூரில் 'கோபால் சர்க்கஸ்' ஆரம்பிக்கப்பட்டது. மூன்று வாரங்களுக்குப் பிறகு மற்றோர் ஊருக்குச் சென்றது.

ஒரு ஆண்டிற்குப் பிறகு ரங்கு சர்க்கஸ் கம்பெனியில் செய்யப்படும் சகல வித்தைகளையும் கற்றுக்கொண்டான். அடிக்கடி அவனே சர்க்கஸில் பார் வேலைகளைச் செய்ய ஆரம்பித்தான். அந்த ஆண்டுக் கடைசியில் அவன் வேலை செய்த சர்க்கஸ் கம்பெனி வட இந்தியாவிற்குச் சென்றது. ரங்குவும் சென்றான். [தொடரும்]

புயலும் சருகும்

மதிவாணன்

மூன்றாண்டுகளுக்குப் பிறகு அன்றுதான் என் சொந்த ஊரான தென்காசிக்கு வந்தேன். என் பெற்றோர்களைப் பார்க்க வேண்டுமென்றோ அல்லது உறவினர்களைத் தேடியோ வரவில்லை. என் இளமைக் கால நண்பன் குப்புவின் திருமணத்தை முன்னிட்டுத்தான் அவ்வூருக்குக் கிளம்பினேன்.

திருமணம் சிறப்பாக நடந்தேறியது. அன்று நண்பர்களுடன் பொழுது போக்காகப் பேசிக்கொண்டிருந்தேன். பேச்சு வாக்கில், இப்பொழுது, தென்காசியிலிருந்து ஐந்து மைலில் உள்ள செங்கோட்டையில், தன் கணவனுடன் 'வாழ்க்கை' நடத்தும் என் அத்தை மகள் மீனாட்சியைப் பற்றிய பேச்சு எழுந்தது. அந்தப் பேச்சு, என்னை மன உளைச்சலுக்குள்ளாக்கியது. என்றோ என் மனதைவிட்டு விலகி, கற்பனைக்கெட்டா உலகுக்கு ஏகிவிட்டிருந்த பழைய நிகழ்ச்சிகள் என்னதான் நான் என் மனத்தைக் கற்பாறையாக ஆக்கிக் கொண்டிருந்தும் மீனாட்சியை ஓர் முறையாவது பார்த்துவிட்டுத்தான் சென்னை திரும்ப வேண்டுமென்ற எண்ணத்தை எழுப்பிவிட்டன. அதை அடக்க என்னால் இயலவில்லை.

அவள் பொருட்டுத்தான் மூன்றாண்டுகளுக்கு முன், பிறந்த மண்ணையும், பெற்ற தாய் தந்தையரையும், உறவினர்களையும் உதறித்தள்ளிவிட்டுச் சென்னையை வந்தடைந்தேன்.

'மீனாட்சி எனக்கே உரியவள்' என்று நான் உரிமை கொண்டாடிக் கொண்டிருந்தபோது என்னிடமிருந்து அவளைப் பிரித்து வேறொருவனுக்கு — மீனாட்சி முன்பின் பார்த்திராத யாரோ ஒரு பெரியவருக்கு - உரிமையாக்கினார்கள். இதற்கு உடந்தையாக இருந்தனர் என் பெற்றோர்கள். இது ஆச்சரியமா? வெட்கக்கேடா?

ஒரு மாட்டுவண்டியை அமர்த்திக் கொண்டு அப்பொழுதே புறப்பட்டு விட்டேன் செங்கோட்டைக்கு.

* * *

வண்டி மீனாட்சியின் வீட்டின் முன் போய் நின்றது.

வண்டியிலிருந்தபடியே வீட்டினுள் என் பார்வையைச் செலுத்தினேன். அதே கணத்தில், 'வண்டியை விட்டிறங்கலாமா, வந்தவழியே திரும்பி விடலாமா?' என்ற எண்ணமும் எழுந்தது என் மனத்தில்.

என் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவள்போல்உள்ளேயிருந்து வெளியேவந்த மீனாட்சி, என்னைக் கண்டதும், "வாருங்கள் அத்தான்! ஏது, அத்தானுக்கு இத்தனை காலத்திற்குப்

பிறகு என் நினைவு எழுந்திருக்கிறது? வாருங்கள் உள்ளே" என்று வார்த்தைகளை வாரி இறைத்துக் கொண்டே வண்டியின் அருகில் வந்து வரவேற்றாள். என் மனம் பேதலித்து விட்டது.

'மீனாட்சி இம்மூன்றாண்டுகளில் ஒரேயடியாக மாறிப் போயிருப்பாள், அடையாளமே கண்டுகொள்ள முடியாது' என்றெல்லாம் எண்ணியிருந்தேன். ஆனால், அவள் அந்தக் கால மீனாட்சியாகவே தான் இருந்தாள்! மாசுமருவற்ற எழில் அணுவளவு கூடக் குன்றாமல் தான் இருந்தது அவள் அங்கங்களில்! அதே புன்னகைதான்! அன்று என் அன்பு முத்திரைக்குத் துடித்த அதே அதரங்கள் தாம்! ஆம்; அன்று மலர்ந்த பனி ரோஜா மலராகத்தான் இருந்தாள் இன்னும்!

வாய் திறவாமல் அவளைப் பின் தொடர்ந்தேன். கூடத்தில் என்னை உட்கார வைத்துவிட்டுக் காப்பி தயாரிக்க உள்ளே சென்றுவிட்டாள்.

மூன்றாண்டுகளுக்கு முன், அவளை என் உடமையாக்கிக் கொள்ள நான் இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்த நாட்கள் என் மனக் கண்முன் வந்தன. கலகலவென எழும்பி வந்தது, மீனாட்சியின் கைவளையல்கள் பிரிந்து, பிரிந்து ஒன்று கூடும்போது எழும் ஒலி. அந்த ஒலி என் மனதிற்கு மிகவும் இனிமையாக இருந்தது.

வழக்கம்போல் ஒருநாள் என் அத்தையின் வீட்டிற்குச் சென்றேன். என் குரலைக் கேட்டதும் என்ன வேலையில் ஈடுபட்டிருந்தாலும் அப்படியே போட்டு விட்டு வந்து என்னிடம் 'கல கல'வென்று பேசும் மீனாட்சி அன்று என் எதிரில் வரவில்லை. வெகு நேரம் வரையில் எதிர் பார்த்தேன். அவளைக் காணவில்லை! அவளைப் பார்க்காமல் இருக்கவும் என் மனம் பொறுக்கவில்லை. அத்தையைக் கேட்டேன். மாடியில் அவள் இருப்பதாகக் கூறினாள். அங்கு போனேன். ஏதோ புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தவள் என்னைக் கண்டதும், படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடிவிட்டு, படுக்கையில் போய்க் குப்புற விழுந்து விசித்து விசித்து அழலானாள். அவள் திடீர் மாறுதலுக்குக் காரணம் தெரியாமல் "மீனாட்சி! ஏன் அழுகிறாய்? இன்று புதுமையாக இருக்கிறதே" என்றேன் ஆர்வத்துடன்.

அவள் பதில் பேசவில்லை. தலையை மாத்திரம் நிமிர்த்தி ஆர்வத்தோடு பார்த்தாள் என்னை. மீண்டும் குப்புறப் படுத்துக் கொண்டு விசும்பிக் கொண்டிருந்தாள்.

அவளுடைய இந்த விசித்திரச் செய்கையைக் காண என்னால் தாளமுடியவில்லை. அருகில் சென்று அவளைத் தூக்கி உட்கார வைத்து, "மீனா, என்ன நடந்தது, ஏன் அழுகிறாய்?

வாய்திறந்து சொல்லேன்" என்றேன்.

"ஏன் இப்படி என் உயிரை வாங்குகிறீர்கள்? பேசாமல் போய்விடுங்கள்" என்றாள் ஆத்திரத்துடன்.

அந்தப் பதில் முன்னைவிட மேலும் கலவரத்துக்குள்ளாக்கியது என்னை. "மீனா, நீ இப்படிப் பேச நான் என்ன தவறு செய்துவிட்டேன்? தெளிவாகச் சொல்லேன்" என்றேன்.

"சொல்லித்தான் தெரிந்து கொள்ளப் போகிறீர்களா?"

"எனக்கொன்றும் தெரியாதே!" அவள் மீண்டும் மௌனமானாள். விம்மல் மாத்திரம் நிற்கவில்லை

பெருக்கெடுத்தோடும் அவள் கண்ணீர் வெள்ளத்திற்கு எப்படி அணைபோடுவது? எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

மறுபடியும், "இப்படி உன் மனம் நோக நான் என்ன செய்துவிட்டேன், மீனா? அப்படியிருந்தால் சொல்லேன்" என்றேன்.

விசும்புவது நின்றது. நிமிர்ந்து என்னைக் கூர்ந்து நோக்கினாள் தன் கலக்கம் நிறைந்த கண்களால். "அத்தான், நீங்கள் ஒன்றும் செய்துவிடவில்லை. 'உம்;' யாரைச் சொல்லி ஆகப் போகிறது? என்ன இருக்கிறது? என்னுடைய காலம்தான் சரியில்லை." என்றாள் துக்கம் நெஞ்சை யடைக்க.

எனக்குப் பெருத்த ஆச்சரியமாக இருந்தது. "ஏன் உன் காலம் சரியில்லை? அதைத்தான் சொல்லேன்" என்றேன்.

மீனாட்சி நீண்ட பெருமூச்சு விட்டாள். பிறகு, 'நம் ஜாதகம் சரியில்லையாம், நான் செவ்வாய் தோஷக்காரியாம்" என்று கூறி நிறுத்தினாள் வெறுப்பு நிறைந்த குரலில்.

"செவ்வாய் தோஷம் இருந்தால் இருந்துவிட்டுப் போகிறது. அது நம்மை என்ன செய்துவிடுமாம்?"

"அது என்ன செய்யுமோ, எனக்கென்ன தெரியும்? உங்கள் அப்பா, அம்மாவையே போய்க் கேளுங்கள். என்னை மேலும் தொந்தரவு செய்யாது பேசாமல் போய்விடுங்கள். உங்களைச் செவ்வாய் தோஷம் விழுங்கி விடும்!..."

"நிஜமாகவா?"

"..........."

'ஹைட்ரஜன்' குண்டையே என் தலையில் தூக்கி யாரோ எறிந்தாற் போலிருந்தது. நிலைகுலைந்தேன்.

இத்தனை காலமாக நான் யாரை எனக்கு உரியவள் - என் உயிர் என்று எண்ணியிருந்தேனோ அவள் பலவந்தமாகப் பிரிக்கப்பட்டாள் என்னிடமிருந்து. வேறொருவனுக்கு என் கண் முனபே 'தாரை வார்க்க'ப் பட்டாள். அதன் விளைவு—

* * *

"என்ன அத்தான், சிந்தனை பலமாயிருக்கே. காப்பி சாப்பிடுங்கள்!" என்று கூறிக்

கொண்டே காப்பி தம்ளருடன் வந்து நின்றாள் மீனாட்சி.

அசட்டுச் சிரிப்பு ஒன்று சிரித்தேன். அவள் காப்பித் தம்ளரை என் கையில் கொடுத்துவிட்டு "அத்தான், சென்னை வாழ்க்கை எப்படியிருக்கிறது? ஏது இப்படித் திடீர்ப் பிரயாணம்; மனம் மாறி, வீட்டு நினைவு எழுந்து விட்டதா?" என்றாள் குத்தலும் குறும்பும் நிறைந்த குரலில்.

"ஊரில் குப்புவுக்குக் கலியாணமாயிற்றே உனக்குத் தெரியாதா? அவன் வற்புறுத்தி அழைத்திருந்தான். வந்தேன். வந்தவிடத்தில் உன் நினைவு எழுந்தது. இவ்வளவு தூரம் வந்ததே வந்தாயிற்று, இப்படியே உன்னையும் பார்த்துவிட்டுப் போகலாமென்று கிளம்பினேன். மற்றபடி ஒன்றுமில்லை. நீ, சௌக்கியம்தானே?" என்றேன்.

"என் சௌக்கியத்திற்குக் குறைவில்லை! ஆமாம்; என்ன சொன்னீர்கள்? என் நினைவா? ......" என்று சொல்லிக் கலகலவென நகைத்தாள் அவள்.

இப்படியே பேச்சை வளர்த்துக்கொண்டுபோக எனக்குப் பிடிக்கவில்லை. "மீனா! அவர் எங்கே காணவில்லை?" என்றேன்.

"அவரா!...அவர் கோர்ட்டு விஷயமாகத் திருவனந்தபுரத்திற்கு இன்று காலையில்தான் சென்றார்-வர ஒருவாரம் பிடிக்கும். உங்களுக்கு எத்தனை நாள் லீவோ?"



"என்ன குழந்தை, இடந்தவறி வந்துட்டியா?"

"இல்லையே, என் அப்பா அம்மா தான் எங்கேயோ இடந்தவறிப் போயிட்டாங்க."

"ஒரு வாரம் லீவு. இன்னும் ஐந்து நாட்கள் பாக்கி இருக்கிறது!"

"அப்படியா! லீவு முழுவதும் இங்கேயே கழித்துவிட்டுத்தான் போகவேண்டும்!" என்று அதிகாரத் தோரணையோடு கட்டளையிட்டாள். ஆனால், அவள் கட்டளையில் ஏதோ ஒரு பொருள் பொதிந்திருப்பதாகத்தான் பட்டது என் மனதிற்கு.

"உன் விருப்பப்படியே இருந்துவிட்டுப் போகிறேன். வேறு போக்கிடந்தான் ஏது எனக்கு" என்றேன்.

"சரி, கொஞ்சமிருங்கள். சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே அடுக்களைக்குள் சென்றுவிட்டாள் அவள்.

மீண்டும் கடந்த காலத்தை நோக்கிப் பாய்ந்தது என் சிந்தனை. என் உடமையை என்னிடமிருந்து பிரித்தார்களே எங்கள் பெற்றோர்கள்; அவர்களால் இருவரையும் இன்றுவரை பிணைத்துக் கொண்டிருக்கும் காதல் என்ற உறவு முளை நீக்க முடிந்ததா?

"என்ன உட்கார்ந்தபடியே உறங்குகிறீர்கள் அத்தான்! எழுந்திருங்கள் சாப்பிடலாம்." என்று சொல்லிக்கொண்டே என் முன் வந்த மீனுவை, திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு அவளை நன்றாகக் கூர்ந்து கவனித்தேன். மின்சார ஒளியும் எனக்கு உடந்தையாக இருந்தது.

அவள் எழில் வதனம் அந்தக் காலத்தில் இருந்ததை விடப் பன்மடங்கு கவர்ச்சியுடன் மிளிர்ந்தது. பரந்த நெற்றியில், தலையிலிருந்து ஓரிரண்டு மயிரிழைகள் சுருண்டு ஊசலாடிக் கொண்டிருந்தது, மேலும் அழகாகத் தோற்றமளித்தது. கண்களின் கவர்ச்சி...! ஆம்; அந்தக் கால அதே மீனுட்சிதான்.

சாப்பிட இலையில் உட்கார்ந்தேன். மீனுட்சி எனக்கு மிகக் கவனத்துடன் பரிமாறினுள். அதில்தான் எத்தனை லாவகம்! சாப்பிடுவதைக் காட்டிலும் அவளையே பார்த்துக் கொண்டிருப்பதில் வயிறு நிரம்புவதுபோலவும்—பேரின்பமாகவுமிருந்தது. ஆம்; அப்பொழுது ஒரு தனி இன்பத்தைத்தான் கண்டேன்.

சாப்பிட்டானதும் திறந்த மாடியில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டுகளங்கமற்றவான வீதியில் பவனி வந்து கொண்டிருந்த நிலாவையே உன்னிப் பார்த்துக்கொண்டிருந்தேன். மீனுட்சியினுடைய சௌந்தரியத்தின் பிரதிபிம்பமே அந்த நிலாவாகத் தோன்றியது, என் அப்போதைய உள்ளத்திற்கு!

இதற்குள் மீனுட்சியும் தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, வெற்றிலைப் பாக்குத் தட்டுடன் அங்கு வந்தாள்.

அவளும் தூரத்தில் கிடந்த மற்றொரு சாய்வு நாற்காலியை என் அருகில் நகர்த்திப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தாள்.

இருவரும் வெற்றிலைப் பாக்கை மென்றுகொண்டே கடந்த மூன்று ஆண்டுச் செய்திகளைப் பேசிக்கொண்டிருந்தோம். பேச்சுக்கிடையில் "இங்கே உனக்கு எல்லா சௌகரியங்களுமிருக்கிறதா, மீனுட்சி?" என்றேன்.

சிறிது நேரம் பதில் ஒன்றும் பேசவில்லை அவள். பிறகு நீண்ட பெருமூச்சொன்றை விட்டு "என்னவோ சௌக்கியமாகத்தான் இருக்கிறேன்" என்றாள் சலிப்புடன். என் கேள்வியின் உட்பொருளை உணர்ந்துகொண்டாள் போலும்! பணம் அவள் இதய தாகத்தைக்கூடவா தீர்க்கும்?

மேலும் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தோம். அவள் எதைப்பற்றியெல்லாமோ கேட்டாள். நான் பதில் சொல்லிக்

கொண்டிருந்தேன். 'உம்' கொட்டிக்கொண்டே இருந்தாள். நேரம் போகப் போக 'உம்' கொட்டுவதும் நின்றது.

நிமிர்ந்து உட்கார்ந்து அவளைக் கவனித்தேன். நாற்காலியில் சாய்ந்தபடியே உறங்கிவிட்டிருந்தாள்.

புழுப்போல் நெளிந்துகொண்டிருந்த என் மனப் பாம்பு, வாலைத் தரையில் ஊன்றி ஒரே துள்ளுத் துள்ளி மேலெழும்பி, சீறிப் படமெடுத்தாடியது.

நிலவு மேலும் மேலும் தன் ஒளி பரப்பிக்கொண்டிருந்தது. என் மனப் பாம்புக்கு இன்ப வெறியைத்தான் தந்தது அது.

நான் வீற்றிருந்த சாய்வு நாற்காலியை விட்டு எழுந்து அவளருகிற் சென்றேன்.

'இன்னும் மீனாட்சி என்னுடையவளாக இருந்தாலும் மாற்றானுக்கு மனைவியல்லவா? கேவலம் மனிதத் தன்மைக்கே ஒவ்வாத செயல்!' என் மனச்சாட்சி அந்தச் சமயத்திலும் குத்திக் காட்டியது. ஆனால், என் மனவெழுச்சி என்னை நிலைகுலையச் செய்தது.

வெறி பிடித்தவனைப் போல் என்னை அறியாமலேயே "மீனாட்சி!" என்று கூப்பிட்டுவிட்டேன்.

அவள் உறக்கம் கலைந்தது. அழகாகத் தன் விழிகளை மூடிக்கொண்டிருந்த இமைகளை மெல்லத் திறந்து என்னை நோக்கினாள். ஆகா; அந்தப் பார்வை...! என்னவோ சொல்ல வாயெடுத்தேன். நாவசையவில்லை. மௌனமாக நின்றேன்.

எழுந்து நின்று "அடடா! பேசிக்கொண்டே நன்றாக உறங்கிவிட்டிருக்கிறேனே. அத்தான்! இன்னும் உங்களுக்கு உறக்கம் வரவில்லையா? கீழே வாருங்கள் போகலாம்" என்று சொல்லிக்கொண்டே படியை நோக்கி நடந்தாள் மீனாட்சி!

மறுபடியும் மனதைத் திடப்படுத்திக்கொண்டு "மீனாட்சி!" என்று கூப்பிட்டேன். அவள் கைப்பிடிச் சுவரைப் பிடித்த



படி மாடிப் படியில் நின்று "குடிக்கத் தண்ணீர் வேண்டுமா அத்தான்?" என்றாள்.

"ஒன்றும் வேண்டாம், போய்ப் படுத்துக்கொள்" என்றேன். அடுத்தக் கணம் என் அசட்டுத் தனமான பதிலை நினைத்து வருந் தவும் செய்தேன்.

மீனாட்சி விடு விடென்று மாடிப் படியிறங்கிச் சென்றுவிட் டாள். உணர்ச்சி அற்ற மரக் கட்டை போல் மாடிப் படிகளில் இறங்கினேன், அவளைப் பின் தொடர்ந்து.

* * *

மறுநாள் காலையில் 'அத்தான்!' என்ற இனிய குரல் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தேன். என் எதிரில் கையில் காப்பி தம்ள ருடன் மீனாட்சி நின்றிருந்தாள். 'நல்ல உறக்கம்போலிருக்கிறது!' என்று சொல்லிக்கொண்டே என் எதிரில் காப்பி தம்ளரை வைத்தாள். அவளை உற்றுக் கவ னித்தேன். களங்கமற்றுத் திகழ்ந்தது அவள் வதனம்.

கையில் தம்ளரை எடுத்துக் கொண்டு "மீனு, உன்னிடம் ஒரு விஷயம் சொல்லவேண்டும், சொன்னால் கோபித்துக்கொள் வாயா?" என்றேன்.

"உங்களிடமா அத்தான் கோபித்துக்கொள்வது? சொல் லுங்கள்!" என்றாள் முறுவலித் துக்கொண்டே.

"நேற்று இரவு......சொல்லி விடட்டுமா?"

"..............."

"நீ ரொம்ப அழகாக இருந் தாய். அப்பொழுது நான்..."

மீனாட்சி என்னையே கம்பீரத் துடன் பார்த்துக்கொண்டிருந் தாள்.

"மீண்டும் உண்மையாகச் சொல்கிறேன். நீ ரொம்ப அழ காகயிருந்தாய். அப்பொழுது நான்..."

அவள் அப்பொழுதும் மௌனமாகத்தான் நின்றிருந் தாள். நான் தொடர்ந்து "அதை நான் குற்றமாக நினைக்கவில்லை. வேறுவிதமாகவும் சொல்ல முடி யாது. மீனு..." இப்படியே பேசிக்கொண்டிருந்தேன்.

அப்பொழுது அவள், "அதைப் பற்றி யெல்லாம் இப்பொழுது சொல்ல வேண்டாம் அத்தான்" என்றாள். பிறகு எவ்வித மாற் றமு மில்லாமல் அங்கிருந்து சென்றுவிட்டாள் அவள்.

இதுஎனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. "மீனாட்சி அந்தக் காலத்தில் இருந்தது போலவே அல்லவா இப்பொழுதும் இருக் கிறாள்!" என்று எண்ணமிட் டேன்.

மீனாட்சியின் செய்கை, நடத்தை, பேச்சு, களங்கமற்ற உள்ளம் இவை யாவும் ஒன்று சேர்ந்து என் மனத்தில் பெரும் புயலையே உண்டாக்கிவிட்டன.

அந்தப் புயலைச் சமாளிக்க என் மனப் பாம்பால் முடிய வில்லை. அன்று இரவு ஏற்பட்ட இடியின் அதிர்ச்சியால் சோர்ந்து கிடந்ததால், இப்பொழுது வீசும் புயலில் தலை தூக்கி நிமிர்ந்து

பார்க்கக்கூடச் சக்தியற்றுச் சுருண்டு கிடந்தது. மேலும் பயங்கரமாக வீசும் புயலைச் சமாளிக்க முடியாமல் மெல்லத் தன் புற்றை அடைந்துவிடத் தீர்மானித்துவிட்டது அந்தப் பாம்பு. ஆம்; அந்த முடிவுதான் சரி!—

சிறிது நேரம் கழித்து மறுபடியும் உள்ளே வந்தாள் மீனுட்சி!

"அத்தானுக்கு என்ன, படுக்கையை விட்டு எழுந்திருக்க மனம் வரவில்லையோ! எழுந்து வாருங்கள் அத்தான், குளிக்க வெந்நீர் எடுத்து வைத்திருக்கிறேன்; ஆறிவிடப் போகிறது" என்றுள் அவள்.

என் மனதைத் திடப்படுத்திக்கொண்டு "மீனு, என்னத்திற்காக வெந்நீர்! நான் குளிர்ந்த தண்ணீரில்தான் இப்பொழுதெல்லாம் குளிக்கிறது வழக்கம். பாவம்! ரொம்பச் சிரமம் கொடுத்துவிட்டேன் உனக்கு. உம்...மீனு, இப்பொழுது பத்தரை மணி வண்டிக்கு நான் சென்னைக்குப் புறப்பட வேண்டும். எனக்கென்னவோ இங்கே இருக்கவேண்டுமென்றுதான் எண்ணம். ஆனல், அங்கே நிறைய வேலையிருக்கிறது; இன்னெரு சமயம் ஒரு மாத லீவில் வருகிறேன்" என்றேன், மென்று விழுங்கிக் கொண்டே.

"என் அத்தான் திடீர்ப் பிரயாணம்? அதெல்லாம் முடியாது. மூன்று தினங்களாவது இருந்துவிட்டுத்தான் போகவேண்டும்" என்றுள் மீனுட்சி, கண்டிப்பான குரலில்.

"பரவாயில்லை மீனு! உன்னைப் பார்க்கவேண்டுமென்று ஆவலாயிருந்தது. பார்த்தாயிற்...று"

திடீரென்று மீனுட்சி தன் முகத்தைக் கைகளால் கெட்டியாக மூடிக்கொண்டாள். விம்மல் உண்டாகியது. சட்டெனப் படுக்கையை விட்டெழுந்து அவள் அருகில் போய் அவள் கைகளை விலக்கினேன். அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் குற்ருல நீர்வீழ்ச்சியாகப் பெருகி வழிந்துகொண்டிருந்தது.

என்னை, அன்று போலவே இன்றும் அவளுடையவனுகவே கருதிக் கொண்டிருக்கிருள் போலும்! அவள் தன் கையை நான் விலக்கியதையோ, தலையை வருடி விட்டுக் குழந்தையைச் சமாதானம் செய்வதைப் போலச் செய்ததையோ கவனித்ததாகத் தெரியவில்லை. அவள் தன்னுடைய உணர்ச்சியின் எல்லையைக் கடந்துவிட்டிருக்க வேண்டும்! என் மனதில் வீசும் புயலின் தன்மையை உணர்ந்துவிட்டிருக்கிருள். நாங்கள் மூன்ருண்டுகளுக்கு முன் ஏற்றி வைத்த அணையா விளக்கு அப்பொழுது அகண்டாகாரமாக எரிந்து கொண்டிருப்பதாகத் தோன்றியது எனக்கு. அவள் மீண்டும் முகத்தைத் தன் கைகளால் பொத்திக் கொண்டு விசித்து, விசித்து அழலானுள்.

என்னல் அவளைச் சமாதானப்படுத்த முடியவில்லை. நேரமும் சென்று கொண்டேயிருந்தது.

காலை உணவு சாப்பிடும்போது மீனாட்சி என் எதிரில் வரவேயில்லை. ரயிலுக்குப் புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருக்கும்போது நான் இருக்கும் அறைக்குள் வந்தாள். அவள் வதனம் மனித விரல்பட்ட அனிச்சப் பூப்போல் வாடிப் போயிருந்தது. அவள் சற்று முன் வரை அழுது கொண்டிருந்திருக்க வேண்டும்.

உலர்ந்துபோன அவளுடைய அதரங்கள் அசைந்தன. "அத்தான், நானும் உங்களுடன் புறப்பட்டு வந்துவிடுகிறேன். சென்னையில் இருக்க முடியாதென்றால் காஷ்மீருக்கு வேண்டுமானாலும் போய்விடுவோம்" என்றாள் திடமான குரலில்.

"மீனாட்சி!" என்றேன் உணர்ச்சியின் வயப்பட்டு.

அவள் அடுத்தகணம் என்ன எண்ணினாளோ! "ஆ! எத்தனை பெரிய தவறுசெய்யத் துணிந்துவிட்டேன். அத்தான், இந்த நேரத்தோடு, அந்தக்கால நிகழ்ச்சிகளை யெல்லாம் அடியோடு மறந்துவிடுவோம்" என்று படபடப்புடன் கூறி, அறையை விட்டு வெளியேறிவிட்டாள்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. வண்டி வாசலில் காத்துக்கொண்டிருந்தது; நான் புறப்பட்டுவிட்டேன். மீனாட்சியைக் காணவில்லை. என்னை வழியனுப்பக் கூட அவள் தன் அறையிலிருந்து வெளிவரவில்லை. அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் போகவும் எனக்கு மனம் துணியவில்லை.

அவள் அறையின் வாசற்படியருகில் சென்று, தாளிடாமல் சாத்தியிருந்த கதவைச் சிறிது திறந்தவாறு "நான் போய்வருகிறேன் மீனாட்சி!" என்று சொன்னேன்.

கட்டிலில் குப்புறப் படுத்துக் கிடந்தவள், உடனே எழுந்து வந்து கதவின் மறைவில் நின்று "கட்டாயம் போகத்தான் வேண்டுமா அத்தான்?". என்றாள் தழதழத்த குரலில்.

"ஆமாம், வண்டி வாசலில் காத்துக் கொண்டிருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே வாயிலை நோக்கி நடந்தேன்.

அவள் என்னைப் பின் தொடர்ந்து வாசல்வரையில் வந்தாள். வண்டியில் ஏறிஉட்கார்ந்து கொண்டே ஜாடையாக அவளைப் பார்த்தேன். அவளும் என்னைப் பார்த்தாள். ஆனால்—?

அடுத்தகணம் உள்ளே ஓடி மறைந்துவிட்டாள் மீனாட்சி, புயலின் சுழற்சிக்கிடையில் சிக்கிச் சுழற்றி யடிக்கப்பட்டுக் காற்றோடு கலந்து மறைந்துவிடும் சருகு போல!

வளரும் இலக்கியம்

தமிழர்கள் தங்கள் இதயத்தைப் பிய்த்து எறிந்தாலொழியக் கம்யூனல் ஜி. ஓ. என்ற வார்த்தையை மறக்க முடியாது. அவ்வளவு தூரம் தமிழர்களின் சமூக வாழ்வில் ஜீவநாடியாக அமைந்துவிட்டது அந்தச் சட்டம். எனவேதான் சமீபத்தில் கம்யூனல் ஜி. ஓ.வைக் குறித்துச் சென்னை ஹைக்கோர்ட்டும், சுப்ரீம் கோர்ட்டும் 'அநியாயம்' வழங்கியிருப்பது தமிழ் மக்களுக்குக் கொதிப்பை உண்டாக்கிவிட்டிருக்கிறது. வகுப்புரிமைக் கிளர்ச்சி தமிழ்நாடு முழுவதும் குமுறிக் கொண்டிருக்கிறது. வகுப்புரிமைச் சட்டம் மீண்டும் வரவேண்டும் என்பதே தமிழ்ப் பெருமக்களின் எண்ணமாகவும் இருக்கிறது. ஏனென்றால், தமிழ் நாட்டில் தமிழ்மக்கள் முன்னேறுவதற்குக் கம்யூனல் ஜி. ஓ. ஒன்று தான் ஏணியாக விளங்கியது. வாய்க்கால் வழியாக ஓடிவரும் தண்ணீரை வறண்ட வயலிலே வாடிக் கிடக்கும் பயிருக்குப் பாய்ச்ச வேண்டுமென்பதுதான் வகுப்புரிமைச் சட்டம். வாடிக் கிடக்கும் இனம் வளம்பெற்று வாழவேண்டுமென்பதையாரும் மறக்க மாட்டார்கள். மறுப்பவன் உலகின் கண்டனத்திற்கு ஆளாவான். இது உண்மை. ஆனால், இங்கோ சமூக நீதிச் சட்டத்தின் பெயரால் தகர்க்கப்படுகிறது. ஒரு துணைக் கண்டத்தில் வாழும் தனிஇனம் சுயநலக்காரர்களின் சூதாட்டத்திற்குப் பணயமாக வைக்கப்பட்டிருக்கிறது. தகுதி, திறமை என்றெல்லாம் 'பகடை' உருட்டி, முன்னேற்றப் பாதையை அடைக்கப் பார்க்கிறார்கள்: வகுப்புரிமைப் போராட்டம் இக்கொடுமையின் வரலாற்றைத்தான் ஆதார பூர்வமான புள்ளி விவரங்களுடன் விளக்குகிறது.

மறுக்க முடியாத சான்றுகள்-அப்பட்டமான உண்மைகள்—இவை, வகுப்புரிமைச் சட்டத்தின் முக்கியத்தைத் தெளிவாக்குகின்றன. தமிழ் மக்களின் உயிர் நாடியான இச்சட்டத்தின் சரித்திரத்தையும், விதிகளையும் நன்றாகத் தெரிந்துகொள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் இப்புத்தகத்தை அவசியம் படிக்க வேண்டும். நல்ல சந்தர்ப்பத்தில் வெளியிட்டிருக்கும் பயனுள்ள புத்தகம் இது.

[வகுப்புரிமைப் போராட்டம் — க. அன்பழகன் எம். ஏ. எழுதியது வெளியிட்டோர்: மக்கள் மன்றம், பவழக்காரத் தெரு, சென்னை 1. விலை ரூ. 1—12—0.]

அரசியல் உலகம்

பொன் வண்ணக் கதிர்களை அள்ளி வீசிக்கொண்டு காலையில்

தோன்றும் கதிரோன் கண்ணுக்குமட்டுமல்ல, கருத்துக்கும் நல்ல விருந்தளிக்கிறான். உதய சூரியனைக் கண்ட இருள் மறைகின்றது. பனித் துளிகள் மடிகின்றன. மக்கள் உறக்கம் நீங்கி உற்சாகம் கொள்கின்றனர். தோழர் ஏ. கே. வேலனை ஆசிரியராகக் கொண்டு காஞ்சையிலின்று வெளிவரும் ஞாயிறு உண்மையிலேயே பொன் வண்ணக் கருத்துக்களை அள்ளிக் கொண்டு வருகிறது. அரசியல் விபசாரிகளின் இரவுக் கோலத்தை வெட்டவெளிச்சமாக்கிக்கொண்டு, 'வெளுக்கும் வான விளிம்பில்' முகம் காட்டும் 'ஞாயிறு,' தெறிக்கும் சொற் கதிர்களை வீசுகின்றது. தேவையான கருத்துக்களைத் தெளிவாகத் தரும் சிறந்த கட்டுரைகள்—கதைகள். இவை பத்திரிகையின் தரத்தை உயர்த்துகின்றன.

[ஞாயிறு — மாதமிருமுறை: ஆசிரியர்: ஏ. கே. வேலன். இணையாசிரியர்: தாமரைச் செல்வன் தனிப் பிரதி விலை 0—3—0.]

கிடைக்கப் பெற்றோம்

விடிவெள்ளி: முற்போக்குக் கலை, இலக்கிய, அரசியல் ஒளியோடு முளைத்திருக்கும் புதிய வாரப் பத்திரிகை. ஆசிரியர் வ. விஜயபாஸ்கரன். விலை 0-2-0. 32—33 செம்புதாஸ் தெரு—சென்னை 1.

ஆறவுன்ஸ் ஆட்சியிலே: எழுதியது எம். ஆர். ராதா. வெளியிட்டோர் ரத்னு பதிப்பகம், திருச்சி, விலை 0-4-0.

அண்ணுவின் காதல்: 'சாமி' எழுதியது. வெளியிட்டோர்: எம். கன்னியப்பன், 44, நைனியப்பன் தெரு, சென்னை 1. விலை 2 அணு.

சமாதான அறைகூவல்: தமிழ் நாடு சமாதானக் கமிட்டியார் வெளியிட்டிருக்கும் துண்டு வெளியீடு. விலை 0-2-0. 31/79, செம்புதாஸ் தெரு, சென்னை 1.

நேர்மை: தனி வெளியீடு. ஆசிரியர் இர இளவரி. விலையும் முகவரியும் வெளியிடப்படவில்லை.

சிறுவர் உலகம்

இப்பொழுது சிறுவர் சிறுமியர்களுக்கென்று வெளிவரும் பத்திரிகைகள் ஏராளம்; அதுமட்டுமல்ல, அவ்வப்போது தோன்றி மறையும் 'ஈசல்' பதிப்பகங்களின் காலணு-அரையணுக் 'காளான்' வெளியீடுகள் வேறு குவிந்து கொண்டு வருகின்றன. இவையெல்லாம் உண்மையிலேயே சிறுவர்களின் நன்மைக்காக வெளியிடப்படுகின்றனவா என்றால் அதுதான் இல்லை. சிறுவர்கள் முகமூடியணிந்து கொண்டு கொள்ளையடிப்பது, பூதத்தோடு சண்டையிடுவது, ஸ்டண்ட் வேலைகள் செய்வது-இன்னும் மாயாஜாலக் கதைகள் போன்றவைகளை வெளியிட்டு, அந்த இளம் இதயங்களில் விபரீதமான எண்ணங்களைப் புகுத்திக் குட்டிச்சுவராய் அடிக்கிறார்கள். குழந்தைகளின் அறிவு கோடை வெயிலில் தீயும் கொழுந்துபோல் பாழாகிக்கொண்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில் தோன்றி

யிருக்கும் பூஞ்சோலை நமக்கு நம்பிக்கையளிக்கின்றது. முகமூடி வீரர்களைப்பற்றியும், துப்பறியும் துரைகளைப் பற்றியும் கற்பனை செய்துகொண்டு எண்ணத்தைக் குழப்பிக்கொண்டிருக்கும் இளம் சிறுர்களுக்கு 'இன்ஷ்யூரன்ஸ் என்ருல் என்ன' என்பது போன்ற தேவையான விஷயங்களை எடுத்துக் கூறுகிறது. பெற்ரேர்கள் தைரியமாகத் தங்கள் குழந்தைகளைப் 'பூஞ்சோலை'யில் உலவ விடலாம்!

[பூஞ்சோலை—சிறுவர் மாதப் பத்திரிகை. ஆசிரியர் அழ. வள்ளியப்பா. விலை 0-4-0. 135, பவழக்காரத் தெரு-சென்னை 1.]

தென்றல் நூற்பதிப்புக் கழகத்தார்கள் தம்பி தங்கைகளுக்காக வெளியிட்டு வரும் கதைப் புத்தகங்கள் குறிப்பிடத் தகுந்தவை. சிறுவர்கள் படிப்பதற்கு எத்தகைய கருத்துக்களைத் தரவேண்டும் என்பதை அவர்கள் அறிந்துள்ளார்கள். பைங்கிளி அதே முயற்சியில் ஒன்று.

[பைங்கிளி — எழுதியது ப. கு. தஞ்சிதம். வெளியிட்டோர். தென்றல் நூற்பதிப்புக் கழகம்: ஜலகண்டபுரம். விலை 0-2-0]

வரப்பெற்ரேம்

கலைமலர்: பதிப்பாசிரியர். மலர்மகன். வெளியிட்டோர்: ராஜன் பதிப்பகம், மீளவிட்டான், தூத்துக்குடி. விலை 0-0-3.

ராஜகுமாரன்: ஆர். எஸ். சம்பந்தம் எழுதியது. சுண்டெலிப் பதிப்பகம், 108, வடக்கு ரத வீதி, சீர்காழி, விலை 0-1-6.

சிறுகதை

சந்தேகம் எத்தகைய விபரீதமான விளைவுகளை உண்டுபண்ணிவிடுகிற தென்பதைப் 'பழி' விளக்குகிறது. படிக்கவேண்டிய சிறுகதை 'பழி'. எழுதியது: நாவரசு. சூழ்நிலை வெளியீடு 1/231, தங்கசாலை, சென்னை—1. விலை அணு 4.

— அரசன்.

Edited, Printed and Published by MURUGU SUBBAMANIAN for PONNI LTD. at PONNI ACHAKAM, 16, Seni Amman Koil Street, Tondiarpet, Madras—21